செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.


# பாதுகாவலன்

PATHUKAVALAN

29-11-1985

மலர் 111

இதழ் 41

பிரதி சதம் 75

கத்தோலிக்க வார ஏடு



UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED
6-12-1985
PERIODICALS


## கிறிஸ்தவர்களுக்கு ஜனாதிபதி சிங் பாராட்டு

ஜனாதிபதி ஜெயில்சிங் எதிர்வரும் மாசிமாதத்தில் பாப்பரசர் 2-ம் அருள் சின்னப்பர் இந்தியாவுக்கு வருகைதர விருப்பதையிட்டு மகிழ்ச்சி தெரிவித்ததுடன், நாட்டில் பல்வேறு துறைகளிலும் கிறிஸ்தவ சமூகம் ஆற்றிவரும் பங்களிப்பைத் தாம் பெரிதும் மதிப்பதாகக் கூறினர்.

பந்திரா என்னுமிடத்தில் கார்த்திகை 3ம் திகதி தேசிய கிறிஸ்தவர் சம்மேளனத்தைத் திறந்து வைத்தபோதே இவ்வாறு கூறிய அவர் ரோமாபுரிக்கு முன்னரே கிறிஸ்தவம் இந்தியாவுக்கு வந்துவிட்டதென்றும் அன்று முதல் கிறிஸ்தவ போதகர்கள் இந்தியாவின் வளர்ச்சிக்குத் துணைபுரிந்து தலைசிறந்த கல்வி நிறுவனங்களையும், துன்புறுவோரின் பிணி தீர்க்கத் தலைசிறந்த வைத்திய சாலைகளையும் நடத்திவந்துள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடாகையால் வேறு பல நாடுகளைப் போலல்லாமல் இங்கு எல்லாச் சமயங்களுக்கும் சமமான மதிப்பு அளிக்கப்படுகிறது என்றார்.

... வேறு கிறிஸ்தவ சபையினரும் ஒன்றுகூடியிருந்த இச் சமேளனத்துக்குத் தலைமை வகித்த திரு ஜோர்ஜ் மெனேஸேஸ் தென் ஆபிரிக்கா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளைவிட இந்தியாவில் கிறிஸ்தவம் ஸ்திரமாக இருப்பதாகக் கூறினர்.

பிரசித்திபெற்ற பத்திரிகையாளாரன திரு எம். வி. கமாத் 'தேசிய வாழ்வில் கிறிஸ்தவர்' என்னும் தலைப்பில் உரையாற்றுகையில் திரைப்படங்களில் கிறிஸ்தவர்களைக் குடிகாரராகவும், துஷ்டராகவும் ஒழுக்கமற்றவர்களாகவும் சித்திரிப்பதை எதிர்த்து, குற்றச்செயலையும் ஒழுக்கவீனத்தையும் பொறுத்தமட்டில் ஒரு சமூகம் மற்றொரு சமூகத்துக்குப் புத்திசொல்லத் தேவையில்லை என்றார்.

## இறை பணிக்குத் தடை!

வேலை நாட்களில் பகல் நேரத்தில் மறையைச் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கும், திருப்பலிக்கும் புறுண்டியில் தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்கா கண்டத்தின் மத்திய பகுதியில் இருக்கும் இந்நாட்டில் இத்தடையை மீறிய 16 குருக்கள் சிறைத்தண்டனைக்குட்படுத்தப் பட்டார்கள்.

இத்தடைச் சட்டத்தினால் ஞானொடுக்கங்கள், இளைஞர் கருத்தரங்குகள், மறைக்கல்வி வகுப்புகள், வழிபாட்டுக் குழுக்கள், திருமண ஆயத்த வகுப்புகள் முதலியனவும் தடை செய்யப்பட்டுள்ளன. இச்சட்டங்களை மீறிய வெளிநாட்டுக் குருக்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப் பட்டுள்ளார்கள். 15 வருடங்களுக்கு முன் 300 வெளிநாட்டு மறைபரப்பாளர்களைக் கொண்டிருந்த இந்நாட்டில் தற்பொழுது 65பேர் மட்டுமே பணியாற்றுகிறார்கள்

## ஆலய அபிஷேகத்தில் இந்திய அமைச்சர்

உத்தரப் பிரதேசத்திலுள்ள மிரட் மறைமாவட்டத்தில் மோடிநகர் என்னுமிடத்தில் அமைக்கப்பட்ட புதிய ஆலயமொன்றை அபிஷேகம் செய்யும் சடங்கில், சுகாதார குடும்பநல அமைச்சரான திருமதி மோஹினி கித்வாய் கலந்து கொண்டார். காணிக்கைப்


(தொடர்ச்சி 8-ம் பக்கம்)


## ஆயர் மன்றங்களின் முக்கியத்துவம்

வத்திக்கான் சங்கத்தினால் கொண்டு வரப்பட்ட மாற்றங்களின் தாக்கங்கள் பற்றி இம்மாத ஆரம்பத்தில் இந்தோனேசியா ஆயர்கள் கலந்துரையாடினார்கள். தற்பொழுது உரோமாபுரியில் ஆரம்பித்துள்ள ஆயர்மன்ற கூட்டத் தொடருக்கு தங்கள் ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கும் முகமாகவே இக்கூட்டம் நடைபெற்றது,

உரோமாபுரியை திருச்சபையின் மையமாக ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில் எல்லா நாடுகளின் ஆயர்களுக்கும் முக்கியத்துவம்கொடுக்கவேண்டுமென்றும் இவர்கள் கேட்டுள்ளார்கள். ஒவ்வொரு நாடுகளின் ஆயர் மன்றங்களுடன் கூடிய தொடர்பு கொண்டு எடுக்கப்படும் தீர்மானங்கள் அந்நாட்டு மக்களின் வாழ்வுக்கு ஏற்றதாக அமைய வழி காட்டப்பட வேண்டும் என்றும் ஆயர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

## யுவதிகளுக்கான கருத்தரங்கு

முருங்கன் பங்கைச் சேர்ந்த யுவதிகளுக்கான மூன்று நாள் கருத்தரங்கில் 73 யுவதிகள் கலந்து கொண்டனர். முதலாம் நாள், ''பங்கின் வளர்ச்சிக்கு யுவதியின் பங்களிப்பு'' பற்றி பங்குத்தந்தை அருட்திரு. லடிஸ்லாஸ் அவர்கள் உரையாற்றும் போது ''பெண்கள் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி சகல துறைகளிலும் முன்நிற்க வேண்டும். அநியாயங்களை எதிர்க்கின்ற மனப்போக்கை வளர்த்துக் கொள்ள வேண்டும். மரியாளைப் பின்பற்றி தேவைகளைத் தேடிச்சென்று சேவை செய்ய வேண்டும். பக்திச் சபைகளில் இணைந்து செயற்பட வேண்டும்'' என்றார்.

அருட்செல்வி தெரசில்டா அவர்கள் ''கிறிஸ்தவ யுவதியின் அழைப்பு'' என்ற பொருளில் பேசும்போது. ''கிறிஸ்து நம்மோடு பலவழிகளில் பேசுகின்றார். அவரது குரலுக்கு செவிமடுத்து அவரை அனுபவித்து உணர வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

அருட்திரு அல்பன் இராஜசிங்கம் அவர்கள் ''கருத்தரங்கின் நோக்கம்'' பற்றிக் குறிப்பிடுகையில், குறுகிய வட்டங்களை விட்டு நாம் வெளியேறி, சமூக உருவாக்கலுக்கு எமது பங்களிப்பைச் செலுத்த வேண்டும் என்றும், புரிந்து கொள்ளும் மனப்பான்மையை வளர்த்து மனிதமாண்புகளை மதிக்கவேண்டும் என்றும் கூறினர்.

இரவு வழிபாடுகள் அருட்திரு பிலிப் அவர்களால் நிறைவேற்றப்பட்டன.

இரண்டாம் நாள் ''2ம் வத்திக்கான் சங்கத்தின் பின் சமூக அப்போஸ்தலத்துவம்'' என்பது பற்றி திரு. மரியரட்னம் அவர்கள் பேசும்போது 2ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் பின் திருச்சபையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் பொதுநிலையினர் நற்செய்தியின் பெறுமதியின்படி வாழ வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினர்.

''போரா சமாதானமா?'' என்ற தலைப்பில் யுவதிகளிடையே விவாதம் நடைபெற்றது.

'பொதுநிலையினரின் ஆன்மீகம்' பற்றி அருள்தந்தை பிலிப் அவர்கள் கருத்துரை வழங்கும்போது, ஆன்மீக வாழ்வின் அத்திவாரம் இறைவனே என்றும், மனிதனையும் இறைவனையும் துயரங்களே தொடர்புபடுத்துகின்றன என்றும் நாளாந்த நிகழ்ச்சிகளின் ஊடாகவே இறைவன் நம்மோடு பேசுகின்றார் என்றும் குறிப்பிட்டார்.

'குடும்ப நலனும் பெண்களும்' பற்றி வைத்திய கலாநிதி திரு. திருநாவுக்கரசு அவர்கள் பல அரிய அறிவுரைகளை வழங்கினர்.

மாலையில் 'உளமாற்ற வழிபாடு' அருள்திரு போல் நட்சத்திரம் அவர்களால் நிறைவேற்றப்பட்டது.

மூன்றும் நாள் 'கிறிஸ்தவ வாழ்வுக்கு வேதாகமம் தரும் மதிப்பீடு' என்பது பற்றி அருள்திரு போல் நட்சத்திரம் அவர்கள் உரையாற்றினர். அவர் தமது உரையில் 'கிறிஸ்தவ யுவதிகள் தமது ஆற்றல்களை நற்செய்தி மதிப்பீடுகள் மட்டில் விருத்தியாக்கி, கிறிஸ்துவின் ஆளுமையை தம்மில் பிரதிபலிக்க வேண்டும், தமது பொறுப்புக்களை உணர்ந்து சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியைக் கொண்டு வர வேண்டும்' என்றார்.

தகவல்:- ஜெயபாலாஜி
முருங்கன்.

## திருத்தந்தையின் வருகையையிட்டு இந்துக்கள் அச்சம்

''பாப்பரசர் தவறான இடத்துக்கு, தவறான நேரத்தில், தவறான நோக்கத்தோடு, வருகின்றார்'' என சிவானந்த யோக வேதாந்த நிலையத்தின் தலைவரான சுவாமி விஷ்ணு தேவநாதா குறிப்பிட்டார். பங்களூரிலிருந்து 60 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள உடுப்பி என்னுமிடத்தில் நடந்த இருநாட் கூட்டமொன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அண்டை மாநிலமான கேரளத்தின் அரைப்பகுதியை மதமாற்றியுள்ள கிறிஸ்துவ போதகர்களுக்குப் பாப்பரசரின் வரவு ஒரு புத்தூக்கத்தை அளிக்குமெனவும், கேரளத்தில் இந்து ஆலயங்கள் அழிக்கப்படுகின்றன. இந்நிலையை நீடிக்கவிட்டால் பஞ்சாப் மாநிலம் போன்ற ஒரு நிலை கேரளத்திலும் உருவாகிவிடும் எனவும் எச்சரித்தார்.

மற்றொரு இந்துத் தலைவரான, விஸ்வ இந்து பரிஷாத் என்னும் குழுவின் நிறுவனரும் தலைவருமான சுவாமி சின்மயானந்தா, இந்தியாவின் பண்பாட்டுக் கேற்றபடி பாப்பரசருக்கு ஒரு நல்ல வரவேற்பு அளிக்க வேண்டுமெனக் கருத்துத் தெரிவித்தார். ''கோடிக் கணக்கான மக்களின் பெருமதிப்பைப் பெற்றவரான பாப்பரசரை வரவேற்க ஒவ்வோர் இந்து இல்லத்திலும் மஞ்சள் கொடி ஏற்றி அவரைக் கௌரவிக்கவேண்டும். பாப்பரசரின் வருகைபற்றிய அச்சங்கள் ஆதாரமற்றவை என்றார்.

ஆயினும், தற்போது இந்து சமயம் அசட்டை, குறுகிய மனோபாவம், தீண்டாமை, சமூகச் சீர்கேடுகள் ஆகியவற்றால் வலியிழந்திருக்கிறதென்றும் 18 வீதமான சிறுபான்மையினர் அவர்களை அடக்கி ஆள்கின்றனரென்றும் இந்துக்கள் தமது அசமந்தநிலையை விட்டொழித்துத் தமது வலிமையை உணர்த்தவேண்டுமென்றும் அதே சமயத்தில் பிறமதத்தவர்களின் உரிமைகளை மதிக்கவேண்டும் என்றும் கூறினர்.

## கிறிஸ்மஸ் சிறப்பு மலர்—1985

20-12-1985 பாதுகாவலன் இவ்வாண்டுக்கான கிறிஸ்மஸ் சிறப்பு மலராக வெளிவரும்.

இன்றைய எமது வாழ்க்கைச் சூழலின் பின்னணிக்கேற்ப, இயேசு மீட்பரின் பிறப்புப் பெருவிழாவை நாம் எவ்வாறு அணுகவிருக்கிறோம் என்னும் மையக் கருத்தை முன்வைத்து, எமது எழுத்தாள அன்பர்களிடமிருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. உங்கள் சொந்த ஆக்கங்களை 12-12-1985-க்கு முன் எமக்குக் கிடைக்குமாறு தயவுகூர்ந்து அனுப்புக.

த. பெ. எண் 2.
யாழ்ப்பாணம்.

ஆசிரியர்
பாதுகாவலன்

'கதிரவனிலும் நிலாவிலும் விண்மீன்களிலும் அறிகுறிகள் தென்படும். மண்ணுலகில் கடற் கொந்தளிப்பின் முழக்கத்தினால் நாடுகள் குழப்பமடைந்து இடுக்கண் உறும். வானத்தின் படைகள் அசைக்கப்படும், அப்பொழுது மனுமகன் மிகுந்த வல்லமையோடும் மாட்சிமையோடும் மேகத்தின்மீது வருவதைக் காண்பார்கள்'
(லூக். 21: 25–27)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# பரிசு

குமாரிற்கு வெளிச்சத்தைப் பார்க்கக் கண்கள் கூசின. கூடவே வயிற்றிலும் நல்ல பசி. காலை பத்துமணியிலிருந்து தொடர்ந்து மூன்று படங்கள் பார்த்ததில் நேரம் போனதே தெரியவில்லை.

'குமார், போய்ச் சாப்பிட்டிட்டு வாவனடா. இன்னும் ஒரு நல்ல கொப்பியிருக்குது போட்டுப் பார்ப்போம்' பாபு நண்பனிடம் கூறினன்.

குமாருக்கு முக்கிய பொழுதுபோக்கு படம்பார்ப்பதுதான். எந்த வீட்டில் இன்று T. V. ஓடுகிறதென்று குமாரைத்தான் கேட்க வேண்டும், தப்பாமல் சொல்லிவிடுவான்.

அன்று சனிக்கிழமையான படியினல் குமாரின் அண்ணன் குகனுக்கு அரைநாள் லீவு. கடைசி முறையாகத் தம்பியிடம் இன்று கதைத்துப் பார்த்து விடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு அலுவலகத்தால் வந்தநேரம் தொடக்கம் வாசலிலிருந்த நாற்காலியிலேயே பிடிவாதமாக உட்கார்ந்து கொண்டிருந்தான். நேரம் செல்லச் செல்லக் குகனுக்கு ஆத்திரம் அதிகரித்துக் கொண்டு வந்தது.

கேற் திறப்பதையும் குமார் சாப்பிட நுழைவதையும் கண்ட மாத்திரத்தில் புயலென அங்கே பாய்ந்தான். 'டேய், நான் கேட்கிறதற்குப் பதிலைச் சொல்லிப்போட்டுப் பிறகு சாப்பிடு' இந்த மிரட்டலை எல்லாம் குமாரிற்குக் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போய்விட்டது. ஒன்றும் பேசாமல் மௌனமாக அம்மாவைப் பார்த்தான்.

அவன் தாய் கண்கலங்க நின்று கொண்டிருந்தாள். அவளை மறைத்து நின்ற வெள்ளைச்சேலை அவனுக்கு அப்பாவை நினைப்பூட்டியது. அப்பா இருக்கும்போதுதான் அவனுக்கு என்ன சொகுசான வாழ்க்கை. தனிக்காட்டுராஜாவாக ஊரைச் சுற்றி வந்தான். 'ம்' பெருமூச்சு விட்டுக்கொண்டான் குமார். 'என்னடா நினைச்சுக்கொண்டு நீ இருக்கிருய்?

'நானொருத்தன் மாடுபோல அடிச்சுப்போட இருக்கிறன் எண்டதுணிவிலைதானேநீரேட்டளக்கிருய்?' குகன்பேசப்பேசக் குமார், அதற்குமேலும் சாப்பாட்டுக்கு முன்னிருக்கப் பிடியாமல் எழுந்து கையைக் கழுவிக்கொண்டான். ஒருவரும் நினையாதவண்ணம் அப்பா திடீரென்று கண்ணைமூடி இன்றோடு ஒருவருடமாகிறது. இந்த ஒரு வருடத்திற்குள் ஆயிரம் தடவைக்குமேல் அண்ணன், அண்ணியின் விஷம் போன்ற வார்த்தைகள் அவனைத் தாக்கிய போதிலும் அவனில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டதா? இல்லையே. மாற்றம் ஏற்பட்டிருந்தால் அண்ணன் இப்படிக் கத்த வேண்டிய நிலையேற்பட்டிருக்குமா? எத்தனை இடத்தில்தான் குகன், குமாரிற்கு வேலை தேடித் திரிந்தான். அப்படித் தேடிக் கிடைத்த வேலைகளைக்கூடக் குமார் ஏற்றுக்கொண்டானா? எத்தனை நொண்டிச் சாட்டுகள் குமாருக்கு அகப்பட்டன, அண்ணனிடமிருந்து தப்புவதற்கு சும்மா இருப்பதே சுகமென்றிருந்தது. இந்தச் சுகத்திற்காக அவன் எதையுமே தியாகம் செய்யத் தயார். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? 'இவனோடை மாரடிக்க என்னாலை ஏலாது. நாளையிலையிருந்து அவன் அல்லது நான் ரெண்டிலை ஒருத்தர்தான் இஞ்சை இருக்க வேணும், முடிவெடுக்கவேண்டியது நான் இல்லை அவன் தான்' இறுதித் தீர்ப்பைக் கூறிவிட்டுக் குகன் அறைக்குள் புகுந்துகொண்டான்.

அடுத்த படத்திற்காகச் சேட்டை மாட்டிக்கொண்டு மெல்ல நழுவப்பார்த்த குமாரிற்கு இதைக் கேட்டதும் 'திக்' என்றது. நான்கு பிள்ளைகளின் தந்தையான தன் அண்ணன் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யப் பாடுபடுவது அவனுக்குத் தெரியும். ஒபீஸில் வேலைசெய்வதோடு. கடைகளில் வேறு கணக்கெழுதி அத்தனை பேருக்கும் சாப்பாடுபோட்டுக்கொண்டிருந்தான். இருக்கும் வீட்டைவிட நிலபுலனே, பணமோ சொந்தம் என்று சொல்ல அவர்களிடமில்லை. முடிவெடுக்க வேண்டியவன் அவன்தானென்று அண்ணனே சொல்லிவிட்டான். தன் சோம்பேறித்தனத்தினல், பொறுப்பற்ற தன்மையால் எத்தனைபேருக்குத்தான் கஷ்டம். அம்மாவை நினைத்துக்கொண்டான். இவ்வளவுநாளும் அவன் மனம் நோகத்தக்க ஒரு வார்த்தையைக்கூட அவள் உச்சரிக்கவில்லை. ஆனல், அண்ணன் பேசும் போதெல்லாம் அவள் மனம் தனக்காகத் துடிப்பதை அவன் அறிவான். இரண்டு பிள்ளைகளையுமே அவள் உயிராக நினைப்பதால் எந்தப் பிள்ளைக்காக அவள் பார்ப்பது முடிவில் மௌனமாகிப் போவாள். நண்பர்களிடம் சொல்லி இதற்கேதாவது வழிதேடித்தானாக வேண்டும். அம்மாவை மனம் வருந்தவிடக்கூடாது. இந்த ஒருவருஷமாகத் தனக்கு ஆதரவளித்த அண்ணனை மேலும், கஷ்டப்படுத்தக் கூடாது. ஏதோவெல்லாம் நினைத்துக் கொண்ட குமார் வீட்டைவிட்டு நடந்தான்.

'அப்ப ஒண்டுசெய் குமார், டவுணிலை இருக்கிற மாமா வீட்டிலைபோய்க் கொஞ்சநாள் இரேன் உனக்கும் ஆறுதல் அண்ணனுக்கும்உன்ரை அருமை தெரியும்', நீண்டநேரக் கலந்துரையாடலின் பயனக பாபு, குமாரிற்குத் தீர்ப்புக் கூறினன். குமாருக்கும் இந்த யோசனை பிடித்தது. எப்போ புறப்படலாம்? என்ற கேள்வி எழுந்த போது 'இப்போதே நான் போகத்தயார்' என்ருன்குமார்.

வீட்டில் எவருக்குமே தெரியாமல் போவது குமாரிற்கு இதுதான் முதல்தடவை. ஒரு வாரமோ, இருவாரமோ மாமா வீட்டில் தங்கலாம், பிறகு என்ன செய்வது? இந்த ஒரு கேள்வியே மனமெங்கும் வியாபித்திருந்தது. திரும்பி வீட்டிற்குப் போகலாமா? அண்ணன் முகத்திலே எப்படி முழிப்பது? வேலை, அந்த நினைவிலே வேம்பாகக் கசந்தது. 'குமார் நித்திரையே? எழும்பெழும்பு இடம் வந்திட்டுது' பாபுவின் அப்பா குமாரின் முதுகில் தட்டினர்.

சனக்கூட்டத்தினூடாகப் புகுந்து தெருவில் வேடிக்கை பார்த்தபடி உற்சாகமாக நடந்து மாமா வீட்டிற்கு வந்தபோதோ அவனுக்குக் கிடைத்தது ஏமாற்றமே. 'அவர் உங்கடை மாமாவே? அவர் இடம் மாறி ஒரு மாதமாச்சுது' என்ற பதில் கிடைத்தபோது தலையைச் சுற்றியது குமாருக்கு. இனி எங்கேயென்று இந்த ரவுணிலை மாமாவைத் தேடிப்பிடிப்பது? அதுவும் விலாசமில்லாமல், பசி வயிற்றைக் கிள்ளியது. பேசாமல் வீட்டிற்கே போய்விடலாமென்றால் பஸ்ஸிற்கும் காசில்லை. அவனுக்கு இங்கே யாரைத் தெரியும்? குமாருக்கு உண்மையில் சோதனைகாலம் இது. கால் போன போக்கில் நடந்து, களைப்படைந்தபோது குழாய் நீர் தெம்பைத் தந்தது. இரவு வந்தபோதோ பிச்சைக்காரனைப்போல் கிடைத்த இடத்தில் படுத்துக் கொண்டான். தூக்கம் வந்தபாடில்லை. விடிய விடிய முழித்திருந்தான். விடிந்தபோது அதே ஒரு நிம்மதியாகவிருந்தது. அப்போ ஒரு பிச்சைக்காரன் எதையோ வைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஆவலோடு அதைப் பார்த்தது. குமாரின் கண்கள். பிச்சைக்காரன் போய்விட்டான். அவன் இருந்த இடத்தில் ஒரு பேப்பர்த் துண்டு கிடந்தது. சும்மா எடுத்துப் பார்த்தான். பண்ணையொன்றை நிர்வகிக்க ஒருவர் தேவையென்றும், தொடர்புகொள்ள வேண்டிய முகவரியும் அதில் கிடந்தது. விசாரித்துப் பார்த்ததில் அங்கிருந்து ஐந்து மைல் தூரம் போகவேண்டும் என்று சொன்னர்கள். குழாய்த் தண்ணீரால் வயிற்றை நிரப்பிக் கொண்டு குமார் ஐந்து மைலையும் நடந்து சென்ருன்.

பண்ணையின் சொந்தக்காரரான ஜேம்ஸிடம் தன்னைப்பற்றிய உண்மைகளைக் கூறி அந்த வேலையைத் தனக்கே தரும்படி மிகவும் கெஞ்சிக் கேட்டான். வீட்டிலிருந்து வந்த அரை நாளுக்குள்ளேயே அவன் பட்டுவிட்ட பாட்டில் உலகத்தைப் புரிந்து கொண்டான். ஜேம்ஸிற்கு குமாரிடம் ஏனே பிடித்துப்போய்விட அவர் சம்மதம் தெரிவித்தபோது அவன் கடவுளின் கருணையை எண்ணி வியந்தான்.

எப்படி இந்த ஐந்தாண்டுகளும் ஓடி மறைந்துவிட்டன! ஆனல், குமாரைப் பொறுத்த மட்டில் பெரும் புரட்சியை அவனிடம் ஏற்படுத்திய பொற்காலம் அது. கடின உழைப்பையும், களவு, பொய். சூதுவாதற்ற நற்பண்புகளையும் அவனிடம் கண்ட ஜேம்ஸிற்கு அவனை நன்ருகப் பிடித்துவிட்டது. குமாரின் தாய் தன் மகனின் முன்னேற்றம் கண்டு இறைவனுக்கு நன்றி கூறினள். உண்மையான சுகம், நிம்மதி உழைப்பில்தானிருக்கிறதென்று குமார் நன்ருகப் புரிந்துகொண்டான்.

காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பினன் குமார். 'என்னப்பா கடுமையான யோசனை' அன்புடன் ஜேம்ஸ் கேட்டார். இந்த மாசக் கணக்குகளைப் போட்டுக் கொண்டிருக்கிறேன் என்ருன் குமார். குமார், உனக்கொரு பரிசு தரப்போகிறேன்' என்ருர் திடீரென ஜேம்ஸ். குமார் திகைத்தான். அது என்னவென்று அவர் கூறியபோது மேலும் திகைத்தான். 'நான் கூலியாக வேலைசெய்த பல ஆயிரம் பெறுமதிகொண்ட இந்தப் பெரிய பண்ணை எனக்கா! குமார் உண்மையில் பெருமைப்பட்டான். கடவுளிற்கு நன்றிகூறினன். 'கடுமையாக உழை, நீண்டநாள் பலனுக்காகக் காத்திரு'. என்றோ படித்தது நினைவில் வந்தது. 'ஐயா இந்தப் பெரிய பரிசைப் பெற நான் தகுதியற்றவன்தானு?' நெகிழ்வுடன் கேட்டான். 'ஓம் குமார், இதுக்குத் தகுதியானவன் நீதான், தன்னலம் கருதாத உன்ரை உழைப்பிற்கு என்ரை பரிசாக நீ இதை ஏற்றுக்கொள். எனது கடைசி காலத்தை நான் தனிமையிலே கழிக்க விரும்புகிறேன்' அவனிடம் விடைபெற்றுக் கொண்டார் ஜேம்ஸ். பெற்றவளோ இதையெல்லாம் கண்டு புளகாங்கிதம் அடைந்தாள். உண்மையான உழைப்பே வாழ்க்கையின் வெற்றியின் இரகசியம் என அறிந்துகொண்ட குமார் ஏதோ ஒருவகையில் தன் நல்வாழ்விற்குக் காரணமாயிருந்த அண்ணனைப் பாசத்துடனும் நன்றியுடனும் நினைத்துக் கொண்டான்.

— வி. கரோலினு
சில்லாலை

# இன்றைய பத்திரிகைத் தமிழ்

ஆவணி மாதம் இலங்கை கத்தோலிக்க சமூகத் தொடர்புச் சாதனத்திற்கான தமிழ் ஆணைக்குழுவினல் நடாத்தப்பட்ட ''இன்றைய பத்திரிகைத் தமிழ்'' –செய்திகள் என்ற தலைப்பில் இடம் பெற்ற கருத்தரங்கின் ஓர் உரையின் சுருக்கத்தினை இங்கு தருகின்ருேம். (ஆ—ர்)

## பத்திரிகைத் தமிழ்–செய்தி

தமிழ் என்று சொல்லும்போது முதலில் சிந்தனைக்கு வருவது முத்தமிழ்.

தமிழ் நடை என்று கூறும்போது பன்னெடுங் காலமாகக் கூறப்பட்டு வரும் பண்டிதத் தமிழும், பாமரத் தமிழும் நினைவுக்கு வரும்

ஒரு காலத்தில் பண்டிதர்கள் தமிழ் மொழியைத் தமது ஆதிக்கத்தில் வைத்திருந்து. இலக்கியம் படைத்தனர். இதனை சாதாரண மக்கள் இலகுவில் படித்து, அதன் கருத்தை உணர முடியாதிருந்ததால் பண்டிதத் தமிழுக்கு எதிரானபோர்க்கொடி எழுப்பப்பட்டது.

பாமர மக்களும் இலகுவாகப் புரியும் வகையில் எழுத்துக்கள் அமையவேண்டுமென்ற கோஷத்தின் காரணமாக இலகுநடை இலக்கியங்கள் வெளிவரத் தொடங்கின.

பிற்பகுதியில் பல்கலைக்கழகங்களின் தோற்றமும் அவற்றின் வளர்ச்சியும் பல்கலைக்கழகத் தமிழ் என்ற ஒன்றைப் புதிதாக உருவாக்கியது. இது இன்றும் கூட சர்ச்சைக்குரியதாகவே யுள்ளது.

இவ்வாறு பண்டிதத்தமிழ், பாமரர் தமிழ், பல்கலைக் கழகத் தமிழ் என்ற பல்வேறு பிரிவுகளுக்கு மத்தியில், 'பத்திரிகைத் தமிழ்' என்று இக்கருத்தரங்குக்குத் தலைப்புக் கொடுத்திருப்பது நான்காவது வாக்கமொன்றை இன்றைய தலை முறைக்கு அறிமுகம் செய்வதாக எடுத்துக்கொள்ளலாம் அல்லது பத்திரிகைத் தமிழைப் பிரித்துக் காட்டுவதாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

பத்திரிகைத் தமிழ் என்பது மேற்கூறப்பட்ட எத்தவொரு வர்க்கத்தையும் சார்ந்ததல்ல வென்றும் கூறலாம். எல்லா வர்க்கத்தையும் இணைத்ததென்றும் கூறலாம்.

பத்திரிகைத் தமிழ் என்று கூறும்போது அது பல பிரிவுகளைக் கொண்டதாக அமைகின்றது. புனை கதை இலக்கியம், கவிதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு, செய்தி என்று இவைகளை வகைப்படுத்தலாம்.

செய்தியைத் தவிர்ந்த மற்றவை அனைத்தும் அதனை ஆக்குபவர்களுடன் சம்பந்தப்பட்டதாதலால், அதன் மொழி வளம் அவரவர் போக்கினைக் கொண்டதாக மிளிரும். பல்கலைக் கழகக்காரர், பண்டிதர்கள் என்று சம்பந்தப்பட்டவர்கள் தமது நடையில் அதனை எழுதுவர்.

ஆனல் செய்தி எனப்படுவது எளிமையான, இலகுவான நடையைக்கொண்டது. பத்திரிகைகள் ஒன்றுக்கொன்று போட்டியாக வெளிவந்தாலும், அவை செய்திகளைத் தெளிவாகவும் எளிமையாகவும் இலகுவாகவும். பொதுமக்களுக்கு வழங்கவே விரும்புகின்றன.

பணம் கொடுத்துப் பத்திரிகையை வாங்கும் ஒருவர், அதனை இன்னொருவரிடம் கொடுத்து வாசிக்கச் செய்து, அதன் அர்த்தத்தைக் கேட்டுப் புரியக்கூடியதாக செய்திகள் எழுதப்படக் கூடாது என்பது அடிப்படை நோக்கமாகும்.

ஒரு காலத்தில் பத்திரிகைகளும் கூட கடினமான தமிழையே செய்திகள் எழுதுவதற்குப் பயன்படுத்தி வந்தன. இலங்கையில் தாய்மொழிக் கல்வித்திட்டம் அமுலுக்கு வந்த பின்னர் இதன் போக்கில் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

தமிழ்நாட்டில் தினத்தந்தி இத்துறையில் ஒரு முன்னோடியாக செய்திகளைப் பேச்சுத் தமிழில் வெளியிட முன்வந்தமை மற்றைய பத்திரிகைகளுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது.

இருப்பினும் சில ஆங்கிலப் பதங்கள் இன்றும் தமிழ்ச் செய்திகளில் அழியாத இடத்தைப் பெற்றே வருகின்றன. ''பட்ஜட்'', 'எம். பி'', ''கவுன்ஸில்'', ''ரெலிபோன்'' போன்ற சொற்கள் பொதுமக்களிடம் நன்கு பழக்கப்பட்டுப் போனதால் செய்திகளில் அவற்றைப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாததாகியுள்ளது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதாகம வாரச் சிறப்பு — 1985

# திருமறைநூல் உன் சொத்து

# வாழ்வுக்கு வழிகாட்டி



அன்பர்களே, நண்பர்களே, இளைஞர்களே,

உண்மை எதுவோ, கண்ணியமானது எதுவோ, நீதி எதுவோ தூயது எதுவோ .. (பிலி. 4: 8–9) என்பனவற்றிலிருந்து உலகம் விலகி நிற்கும் இந்நாட்களில் விழிப்புக் கொண்டு இவற்றை உணரவும், உணர்த்தவும் இளைஞர்சமுதாயம் வீறு கொண்டு வெளிப்பட்டுள்ளது. ''வருங்காலம் உங்கள் கைகளிலே'' என்பதை உணர்த்திவிட 1985 ஆம் ஆண்டை இளைஞர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியிருக்கின்றது ஐக்கிய நாட்டுச் சபை. மேலும் உண்மைகள் பல மறைந்து, தவறுகள் பல மலிந்து மிகுந்து நிற்கும் இக்கால கட்டத்தில், 1985 ஆம் ஆண்டை இளைஞர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தி, இத்தவறுகளில் தாழ்ந்து நிற்கும் இளைஞர் சமுதாயத்தைக் கட்டிக் காத்திட முனைந்து நிற்கின்றது தாய்த் திருச்சபை. உலக சமுதாயத்தோடு இணைந்து அதன் வளர்ச்சியில் விசேஷவிதமாக இளைஞர் சமுதாய வளர்ச்சியில் அக்கறை எடுத்திருக்கிறதென்பதை இளைஞர் ஆண்டிலே, புனித பாப்பரசரின் அப்போஸ்தலிக்க மடல் அறிக்கையிடுகிறது.

இம்மடலில் ஒரு மனிதனின் தனித்துவத்தை, ஆளுமையை உருவாக்கும் காலம் இளமைப் பருவமாகும். எனவே அகில உலக இளைஞர்மட்டில் அன்னை திருச்சபை ஆழ்ந்த அக்கறையும், அவதானமும் கொண்டுள்ளது என திருத்தந்தை மடலின் ஆரம்பத்தில் குறிப்பிடுகிறார். எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டு, புதியதொரு உலகை உருவாக்க வருமாறு அனைத்துலக இளைஞர்களுக்கும் அழைப்பு விடுக்கிறார். புதிய உலகம் சமைக்க வழிகாட்டும் நூல் ஒன்று உண்டு என்று கூறி, திருமறை நூலின் இளைஞனுடன் இறையேசு உரையாடும் நிகழ்ச்சியை முன் வைக்கின்றார், திருத்தந்தையின் கூற்றிலே திருமறை நூல் வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூல் என்பதே அர்த்தமாகும், மேலும் இளைஞர் ஆண்டின் விருதுமொழியாக பங்கேற்பு, வளர்ச்சி, அமைதி இம்மூன்றும் மையக்கருத்துகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த மையக்கருத்துகள் உண்மையிலும், நீதியிலும் உலகிற்கு எடுத்தியம்பப்பட்டு, அனுபவிக்க வேண்டுமாயின் திருமறை நூலே (வேதாகமம்) வாழ்க்கையின் அடி அத்திவாரமாக வழிகாட்டியாக விளங்க வேண்டும். ஏனெனில் திருமறை நூலின் (வேதாகமம்) வார்த்தைகள் பயன்தராமல் திரும்பாது, படைக்கும் ஆற்றல் உள்ளது, நம்பிக்கை அளிக்க வல்லது, வாழ்வளிக்கக் கூடியது. முடிவில்லா வாழ்வு தருவது, ஆன்மாவை மீட்க வல்லது, மீட்பின் ஞானத்தை அளிக்க வல்லது.

திருமறை நூல்(வேதாகமம்) என்றால்......

''இறைவனின் வார்த்தை'' அவர் விரும்பியதெல்லாம் செய்து முடிக்கும். அது பயன் தராமல் அவரிடம் திரும்பாது. (இசை. 55:11) எதற்காக நாம் அனுப்பினேமோ அதை நிறைவேற்றும்.

திருமறை நூல் வேதாகமம் என்பது எத்தனையோ வருடங்களுக்கு முன் கடவுள் அனுப்பி விட்ட அன்புக் கடிதம். திருமறைநூல்—என்ற கடிதம் எதற்காக அனுப்பப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறும். ''இறைவனின் வார்த்தை அவர் விரும்பியதெல்லாம் செய்துமுடிக்கும்...'' இறைவனால் அனுப்பப்பட்ட இக்கடிதம் இப்போதுதான் படிப்படியாக நம்மவர் இல்லங்களையும் வந்தடைந்திருக்கிறது. நமது வீடுகளில் புகுந்து நமது கைகளில் தவழும் திருமறை நூல் (வேதாகமம்) அறிவை வளம் படுத்துவதோடு நில்லாது, இறுதியாக இதயத்திலும் இடம்பெற்று, உறவு—வாழ்வாகவும், செயற்படும்—செபமாகவும் திகழவேண்டும்.

R. M. G. நேசநாயகம்
மறைக்கல்வி நிலையம்,
யாழ்ப்பாணம்.

இந்தத் திருமறை நூல் (வேதாகமம்) புற்றீசல் போல் அன்றாடம் வெளிவரும் நூல்கள் போலன்று. அவைகளை நாம் அறிவோம். அவைகளில் பல பயன் தருவன. சில அழிவுக்கு இட்டுச்செல்லக்கூடியன. திருமறைநூலும் (வேதாகமமும்)- பல நூல்களின் தொகுப்புத் தான்—இருப்பினும் திருமறை நூலை (வேதாகமம்) மற்ற ஏடுகளோடு இணையாக வைத்துப் பேசவோ, எழுதவோ முடியாது. காரணம் திருமறைநூல் (வேதாகமம்) மனிதர்களால் எழுதப்பட்டதாயினும், தூய ஆவியின் தூண்டுதலால் எழுதப்பட்ட உன்னத நூல். இறைவன்—மனிதன் உறவைக் காட்டும் நூல். என்றுமே மாறாத புனித நூல். ஆம் திருமறைநூல் (வேதாகமம்) ஓர் இறை ஏடு என்பதை மறுக்க முடியாது. எனவே அதன் [illegible] இறைவன்—தாம் [illegible] உலகமும் அதனுள் வாழும் மனிதனும் உண்மையிலும் ஆவியிலும் வழிநடத்தப்பட அமைத்துக் கொடுத்துள்ளார். தவறும் உள்ளம் கொண்ட மனிதன் தவறு வரம் படைத்த இந்நூலைத் தன் வாழ்க்கையில் பயன்படுத்தினால் தவறுகளில் நின்று தன்னைக் காத்துக்கொள்வான். இதுவே மறைநூலில் (வேதாகமத்தில்) இறைவன் வகுத்த திட்டமாகும்.

இறை மக்களுக்கு இறை வார்த்தை மட்டில்...

இறை மக்களுக்கு விஷேச விதமாக ''இளைஞர்களுக்கு,'' இறைவனின் வார்த்தைகளில் நன்மதிப்பும், நாட்டமும் ஏற்பட வேண்டுமென்றால் அது இளமையிலிருந்தே தொடங்க வேண்டும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. இளம் உள்ளங்கள் இறைவார்த்தையின் மட்டில் நாட்டம் ஏற்பட்டு, அதனைப் படித்து, புரிந்து, வாழ்வின் அச்சாணியாக்கிக் கொள்ள வேண்டும், மாணவர்களிடையே திருமறைநூல் ஞானம்(வேதாகமம்)எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதை அறியவே வேதாகமப் போட்டி ஆண்டுதோறும் நடைபெறுகிறது. இந்தப் பரீட்சைகள் மூலமாகக் கிடைத்த பதில்கள் திருப்திகரமாகஇருந்தது. அவர்கள்திருமறைநூலை (வேதாகமத்தை) வாசிப்பதில்லை என்றாலும் அதன் மட்டில் ஆர்வம் உள்ளவர்களாயிருப்பது தெரிகின்றது. எனவே தனிப்பட்ட முறையில் திருநூலை (வேதாகமத்தை) வாசிப்பதில்லை என்றாலும் அதன்மட்டில் ஆர்வம் உள்ளவர்களாயிருப்பது தெரிகின்றது, எனவே தனிப்பட்ட முறையில் திருநூலை வாசித்து விளங்கிப் பயன்பெறும் அளவிற்கு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும்.

விடுமுறை திருமறை நூல் (வேதாகமக்) கல்வி:

''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' என்பதற்கொப்ப மாணவர் மனதில் திருமறை நூலில் நாட்டம் ஏற்படப் பண்ண விடுமுறைநாட்களில் திருமறைநூல் வகுப்புக்கள் நடத்தப்படவேண்டும். பாடசாலை நாட்களில் மற்றப் பாடங்களைப் படிப்பதனால் விடுமுறை நாட்களில் பாடசாலையில் பலவித மாணவர்களையும் சேர்த்து திருமறை நூல் (வேதாகம) வகுப்புக்களை நடத்தி அந்த இளம் உள்ளங்களில் திருநூலில் ஆர்வத்தை ஊட்ட வேண்டும். பங்குகள் தோறும் விடுமுறை திருமறை நூல் (வேதாகம) வகுப்புகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். [illegible]

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## விவிலியத்தைப் பற்றிய பொன் மொழிகள்

1. நற்செய்தி நூல்க்ள் இறை மகன் யேசு நம்மை மீட்க எடுத்த இரண்டாவது உடலைப் போன்றவை. (ஓரிஜின்).
2. நற்செய்தி நூல்கள் இறை யேசுவின் அருள்மொழி சுரக்கும் வாய் போன்றது. (புனி. அகுஸ்தீனர்.)
3. வாழ்வின் மறை பொருள்களை எல்லாம் கொண்டுள்ள அரிய நூல் விவிலியமே (கிளாதேல்.)
4. விவிலியத்தைப் படிப்பதும் தியானிப்பதும் எல்லாவற்றையும்விட மிக மேலான பயனுள்ள செயலாகும். (புனி. பத்தாம் பத்திநாதர்)
5. அன்பு செய்யும் ஆற்றல் வாய்ந்த புத்தகம் விவிலியம் ஒன்றுதான் (லக்கோர் தேர்)
6. துன்பங்களுக்கு ஆளானவர்கள் துயரக் கடலில் ஆழ்ந்தவர்கள் உண்மையான ஆறுதலைப் புனித வேதாகமத்தில் காண்பார்கள். அது அவர்களுக்கு தேவ உதவியையும் துன்பங்களை எதிர் நோக்கும் தைரியத்தையும் கொடுக்கும். (பரிசுத்த 12ஆம் பத்திநாதர்.)
7. நம்மை ஞானத்தில் நிறுத்துவதும் உலக துன்பங்களிடையே நம் ஆன்மாவில் அமைதியை உண்டு பண்ணுவதும் ஆகிய இரு பொருள் உலகத்தில் உண்டானால் அது புனித வேதாகமத்தில் ஆழ்ந்த அறிவும் தியானமுமாக இருக்க இயலுமேயன்றி வேறு எப்பொருளாகவும் இருக்க இயலாது. (புனி. ஜெரோம்.)
8. விவிலியம் நான்கு பெரிய நன்மைகளை விளைவிக்கின்றது. அது:
   1. உண்மையை உணர்த்துகின்றது.
   2. தப்பறைகளை அழிக்கின்றது.
   3. துன்பங்களிலிருந்து நம்மை தூரக்கொண்டு செல்கின்றது.
   4. நன்மையை நோக்கி நம்மை நடத்துகின்றது.) (புனித தாமஸ் அக்குவினஸ்)
9. எவ்வளவுக் கதிகமாக விவிலியத்தைத் தியானிக்கின்றோமோ அவ்வளவுக்கதிகமாக அதன் அழகைக் கண்டு பிடிக்கிறோம். திருநூலின் சாரமே என் வாழ்க்கையாக விளங்க என் ஆன்மாவையும் என் வாழ்க்கையையும் விவிலிய பூங்காவினுள் நுழைக்க விரும்புகிறேன் (எலிசபெத் லெசார்)
10. இறைவனின் இதயத்தை காணும் நூல் (புனி. கிரகோரியார்.)
11. உலக இன்பங்களின் உச்சநிலை திருநூலை வாசிப்பதால் வரும் இன்பத்திற்கு முன்வெறும் நிழலாகும். (லேடி ஜேன்)
12. எல்லா இடங்களிலும் எல்லா இனத்தாரிடமும் இடம் பெற்ற நூல் திருநூல் (வில்லியம்)
13. விவிலியத்திலன்றி வேறு எந்த நூலிலும் நான் எனக்காக ஒன்றையும் கண்டதில்லை, விவிலியம் ஒன்றே எனக்குப் போதுமானது. (புனி. குழந்தை தெரேசம்மாள்)
14. விவிலியம் ஓர் அழியாத நித்திய புகழ் வாய்ந்த புத்தகம் ஆகும். கற்ற அறிஞர்களின் அறிவாழத்திலும் ஆழமானது. கன்னிகைகளிலும் தூயதானது. அரசர்களிலும் வன்மையுள்ளது (லக்கோர் தேர்.)
15. இறை மகன் யேசு யூதேயாவில் மனித உருவோடு தோன்றினார். இப்போது அவர் உலகைத் தம் சொற்களால் தமதாக்கிக் கொண்டார். உலகில் இருந்த போது அப்போஸ்தலர்களோடு உரையாடினார். அதே யேசு நம்மிடையே விவிலியத்தின் வழியாக இருக்கிறார் உரையாடுகிறார் (போஸ்ஸுவே)

இத்தகைய பெருமைக்குரிய புத்தகம் விவிலியம். உங்களிடம் உண்டா? உண்டென்றால் கையில் எடுங்கள். ''எங்கள் கைகளிலிருக்கும் வேத புத்தகங்களினின்று நாங்கள் ஆறுதல் அடைகிறோம்'' என மக்கபேயர் சொன்னது போல் நீங்களும் சொல்லி படித்து மகிழுங்கள். ''வீட்டிற்கோர் விவிலியம் நாளுக்கொரு அத்தியாயம்''

தொகுப்பு: இ. ம. ஜெயசீலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநூலைச் செபிப்போம்

## நற்செய்தியின் ஒரு பகுதியைக் குழுவாகச் செபிக்கும் முறை

★ தேர்ந்தெடுத்த பகுதியினை உரக்க வாசித்தல்.

★ இரண்டு மூன்று நிமிட அமைதி.

★ இரண்டாம் முறை அப்பகுதியை உரக்க வாசித்தல் —அல்லேலூயா- பாடுதல்.

★ சூழ்நிலையை — கதாபாத்திரங்களை—முக்கிய இறை வார்த்தைகளை — கற்பனையில் கொண்டு வருதல். (அகக்கண்களால் அவற்றை நோக்குதல்) தொடர்ந்து அமைதியில் தியானித்தல்.

★ அங்கே நான் இருந்திருந்தால் யாரைப்போல் நான் செயல் பட்டிருப்பேன் ?

★ நான் யாரை ஒட்டி, யாரை எதிர்த்துப் பேசி இருப்பேன் ?

★ இயேசுவுடன் எனக்குள்ள உறவு என்னவாக இருந்திருக்கும்?

★ உறவில் ஏதேனும் சிக்கல் எழுகின்றதா ?

★ இந்த நிகழ்ச்சியில் எனக்குக் கோபமூட்டக்கூடியது ஏதேனும் உண்டா ? என்னை மகிழ்விக்கக் கூடியது எது ?

★ எனக்கு இன்று இயேசு அளிக்கும் விசேஷ ''இறை வார்த்தை'' யாது ?

அமைதி தியானத்துக்குப் பின் மேற்கண்ட கருத்துக்களை இப்போது சத்தமாகச் சொல்லி பகிர்ந்து கொள்க.

★ அனுபவித்த யாவற்றையும் சிக்கலானவைகளையும் குழுவில் பகிர்தல்.

★ இறுதியில் கர்த்தர் கற்பித்த செபம் அல்லது விவிலியப் பகுதியைச் செபமாக மாற்றிச் செபித்தல்.

குறிப்பு: இதில் ஏற்படும் சிக்கல்களுக்கு ''அப்படி செய்திருக்கலாம்'' என்று செபநேரத்தில் போதிக்க வேண்டாம்.


★ சிக்கல்களில் பொறுமையாய் இரு.

★ பகிர்தல் வழியாய் அறிந்த யாவற்றையும் இரகசியமாகக் காப்பாற்ற வேண்டும்.

★ விவாதத்தைப் புகுத்தி தியானம் தடைபட்டு விடாமல் கவனமாக இருக்கவும்.

★ திருநூலைத்தந்த பரிசுத்த ஆவியின் துணையின்றி திருநூலை அறிந்து, புரிந்து, அனுபவித்து, செபித்து, வாழ இயலாது என்பதை நினைவில் கொள்க.

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி—1985




மேலிருந்து கீழ்

1. ''தோரா'' என்றால்
2. அன்று அப்போஸ்தலரால் மக்களுக்கு எழுதப்பட்ட மடல்கள் இப்படி அழைக்கப்படுகிறது.
3. அடிபட்டவனைக் கண்டும் விலகிச் சென்றவர்
4. புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் இது கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையைப் பறைசாற்றுகிறது.
7. இது பரலோகத்தில் செய்யப்படுகிறது, பூலோகத்திலும் செய்யப்படுகிறது.
8. இரண்டாம் யெரோபோவாம் என்பவனின் ஆட்சிக் காலத்தில் வடநாட்டில் ஏறத்தாழ பத்து ஆண்டுகள் இறைவாக்குரைத்தவர்
10, இவன் பாரசீக மன்னன். மெசியாவின் முன்னடையாளமாகத் திகழ்ந்தவன். (கீழிருந்து மேலாக உள்ளது)

இடமிருந்து வலம்

1. சின்னப்பரின் மடல்கள்
5. விவிலியத்தில் இது உறவின் அடையாளமாக விளங்குகின்றது.
6. இஸ்ராயேலின் முடியரசு ஏற்படக்காரணமாய் இருந்தவர்
7. முறைப்படி மூத்த பிள்ளைக்குக் கிடைக்கவேண்டிய இதை யாக்கோபு ஏசாயுவிடமிருந்து தந்திரமாக வாங்கிக் கொண்டான். (இது மாறியுள்ளது)
9. இந்தத்தீவில்தான் அருளப்பர் திருவெளிப்பாடு ஆகமத்தை எழுதினார் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.
11. இது பிறந்தது, கோபுரம் சரிந்தது.

மூன்று பரிசுகள் உண்டு

விடைகள் வந்து சேரவேண்டிய இறுதித் திகதி 15-12-85: உறையின் ஒரு மூலையில் விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி என்று எழுதவும்.

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

இயக்குநர்
மறைக்கல்வி நிலையம்,

# இறைவனின் வார்த்தை

### பழைய ஏற்பாடு

— பயன் தராமல் திருப்பாது விரும்பியதெல்லாம் செய்து முடிக்கும், அனுப்பப் பட்ட காரியத்தை நிறைவேற்றும் இசை. 55' 11
— படைக்கும் ஆற்றல் உள்ளது ஆதி 1 அதிகாரம் சங் 32:6-9 ஞான 9:1
— உயிரளிக்கக் கூடியது உப 8:3
— குணமாக்க வல்லது சங் 106:19
— வாழ்வளிக்கக் கூடியது சங் 118:25
— நம்பிக்கையளிக்க வல்லது சங் 118:49
— இன்பம் தரக் கூடியது சங் 118:77
— என்றென்றைக்கும் நிலையாயுள்ளது சங் 118 89
— ஒளிர் விடும் ஒளிவிளக்கு சங் 118:105
— தேனிலும் தேனடையிலும் இனிமையானது சங் 18:10
— நெருப்பைப் போன்றது; சம்மட்டியைப்போன்றது எரே 23:29
— கொன்றொழிக்கக் கூடியது ஓசே 6:5
— அஞ்சா நெஞ்சம் படைத்த போர்வீரனைப்போன்றது ஞான 18:15

### புதிய ஏற்பாடு

— ஆவியும் உயிருமாகும் அரு. 6: 63
— முடிவில்லா வாழ்வு தரும் அரு. 6: 68
— இறுதிநாளில் தீர்ப்பிடும் அரு. 12: 48
— ஒழிந்து போகாது மாற்கு 13: 31
— ஆன்மாவை மீட்கவல்லது யாகப் 1: 21
— உயிரைப் பற்றியது 1 அரு. 1: 1
— வல்லமை மிக்கது 1 கொரி 11: 8
— விசுவசிப்போருள் செயலாற்றக் கூடியது 1 தெச. 2: 13
— விலங்கிட முடியாதது 2 தீமோ. 3: 15
— உயிருள்ளது ஆற்றல்மிக்கது எந்த வாளினும் கூர்மையானது எபி. 4: 12
— போதிக்கவும், கண்டிக்கவும் சீர்திருத்தவும் பயன்படும் 2 திமோ 3: 16
— தேவ ஆவிதரும் போர் [illegible] எபே. 6: 17

நல்ல [illegible] தோழன்

# இறை விடு தூது

மனிதனுக்கு ஒரு கடிதம்
இறைவனிடமிருந்து வந்தது.
என்னவென்று விரித்தால் - அது
ஒரு காதல் கடிதம்.
அன்பின் நிறைவினிலே
அவன் மனிதனைப் படைத்தான்
அவனுக்காய் அனைத்தையும் படைத்து
தனக்காய் அவனைப் படைத்தார்.

அந்த மனிதனுக்குத்தான்
விண்ணகத்திருந்தே
மண்ணக முகவரிக்கு
வந்த கடிதம்.
அதுகாவியம் பெருங் காப்பியம்
அன்பின் தொல்காப்பியம்
வேதாகமம் —
விண்ணிலிருந்து வந்தாலும்
மண்ணகத்தேதான் வார்க்கப்பட்டது
பற்பல அச்சுக்களில் — அது
வார்க்கப் பட்டபடியால்
பல்சுவைகள் நிறைந்துள்ளது.

ஆவிதான் ஏவினார்
இறைவனே எழுதினார்
ஆனால் மனிதனே இதில் கருவியானான்
மனிதன் என்ற பேனாவில்
ஆவி யென்ற மையிட்டு
இறைவன் அந்தப் பெரும்
காப்பியத்தை எழுதினார்.

மனிதன் படைப்புண்டு
அவன் கண்ட வீழ்ச்சியுண்டு
அவனை மீட்க
இறைவன் அளித்த வாக்குண்டு
மனித இன்பம் வாழ்வதற்கு
அறிவுரைகள் பலவுண்டு
இறைவனின் திட்டங்களை
இயம்பிய வாக்குண்டு
பழமொழிகள் பலவுண்டு
ஞானத்தின் ஊற்றுண்டு
எபிரேய கவிமழையும்
எழிலாக அங்குண்டு
தான் தேர்ந்த மக்களை மீட்க
இறைவன் புரிந்த போர்களுண்டு
வீரத்தின் விளை நிலங்களாக
தியாகங்கள் புரிந்த
பலரது வரலாறுண்டு.
இறைவனின் நிறை அன்பு
செயல்பட்ட விதங்களுண்டு
ஆதியிலே அளிக்கப்பட்ட
வாக்குறுதிக்கு
இங்கே நிறைவான பதிலுண்டு
இறைவனின் நிறைவான அன்பை
உலகிற்கு வெளிப்படுத்திய
அடையாளம்
கிறிஸ்துவின் வாழ்வுண்டு
அவர் புரிந்த போதனைகள்
மலைப் பொழிவின் பாக்கியங்கள்
புதுமைகள் பொன்மொழிகள்
பாடுகள் மரணங்கள்
அப்போஸ்தலர் வாழ்வு முறை
திருமடங்கள்
இறை வெளிப்பாடு என்னும்
அனைத்துமே அங்குண்டு - இதை
நாள்தோறும் படிப்போம்
தியானிப்போம் வாழ்வோம்.

ம. இயேசுதாசன்

# திருமறைநூல்...


(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் உள்ளங்களில், ''எனது வாழ்வுக்கு வழிகாட்டும் நூல்'' என்று எப்பொழுது ஏற்றுக்கொள்ளுகின்றனரோ அன்றுதான் தவறுகள் இன்றி உள்ளம் நீதி, அன்பு இவைகளில் கட்டப்பட்ட வாழ்வு அவர்களில் உருவாகும். இறைவாக்கினர் வழியாக இறைவன் நம்மோடு பேசுகிறார். ஆகவே அவர் போதனையைக் கேட்டு அதன்படி நடப்பதே திருமறை நூலின் (வேதாகமத்தின்) விழிப்புணர்ச்சியின் உச்சக்கட்டமாக இளம் உள்ளங்களுக்கு இருக்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித வளனூர் முதியோர் இல்லம் — கொழும்புத்துறை

# பொன் விழா 1935 — 1985



சகோதரிகளின் அன்புப் பணி "எம் இல்லம்"

# இல்லத்தின் முத்தான அனுபவங்கள்

1930-ம் ஆண்டு ஆயர் கயோமார் அ.ம.தி. கேட்டுக்கொண்டதற்கிணங்க இலங்கைத் தீவில் இறைபணி புரிய வெனக் காலடி வைத்தனர் திருச்சிலுவைக் கன்னியர். முதியோர், பிணியாளர், புறக்கணிக்கப்பட்ட காலகட்டம் அது. வயோதிபரைப் பராமரிக்கும் தேவை வானளாவ உயர்ந்திருந்தது. தேவை எங்கேயோ சேவையும் அங்கே. எமது முதற்பணி ஊர்காவற்றுறை மருத்துவ மனையில் உதயமானது. மருத்துவப் பணி ஒரு புறமிருக்க வாழ்வின் இறுதிக்கட்டததில் பயணம் செய்துகொண்டிருந்த முதியவரைக் கவனிக்கவும் பராமரிக்கவும், அன்பு செய்யவும் அறப்பணியாளர் தேவையாக இருந்தது. அருட்கன்னியர் தேவையை உணர்ந்து உடனடியாகச் செயற்பட ஆரம்பித்தனர். திரு.யோசப் என்பவரால் நன்கொடையாக வழங்கப்பட்ட இல்லத்தில் தமது பணியை கொழும்புத்துறையில் ஆரம்பித்தனர். கையில் போதிய பணம் இருக்கவில்லை. ஆனால் கடவுள் நம்பிக்கை இருந்தது. தாம் எதிர்நோக்கப் போகும் தனிமை துன்பங்களை உணர்ந்திருந்ததால் புனித வளனுருக்குத் தம் இல்லத்தை அர்ப்பணம் செய்தனர். வீடுதோறும் இரந்து நின்று பிச்சை பெற்று தம்மை அண்டி வந்தோரை ஆதரித்தனர். மெல்ல மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் ஊடுருவிப் பாய்ந்தது. மெதுவாக ஆனல் உறுதியாக புனித வளனுரின் சக்திமிக்க பாதுகாப்பில் அவரது இல்லம் ஆழமான அத்திவாரத்தில் நிலைத்தது. சொல்லொணு கஷ்டங்களை சோர்வின்றி எதிர்த்து நின்று பணி வாழ்க்கையின் இன்னல்களை எதிர்கொண்டனர் அருட் சகோதரிகள்.

1939ல் இறையருள் இன்னும் சில சோதரிகளை இந்திய மண்ணிலிருந்து எம்முடன் இணைத்தது. யாழ் அரச மருத்துவமனையில் பணியாற்ற வந்த அவர்கள் ஒருவருக்கொருவர் ஒத்தாசை கொடுத்து ஒன்றித்து வாழ்ந்து குழுவாழ்வில் நிறைவு பெற்று மகிழ்ந்திருந்தனர்.

சகோதரிகள் யோசவா, பெனடிக்கா, ஜோண் ஆகியோர் தமது அயரா உழைப்பிலும், அன்புப் பணியிலும் வயோதிபர் இல்லத்தை அன்பு இல்லமாக மாற்றி அமைத்தனர். அவர்களைத் தொடர்ந்து ரணஸ்ரா, ரமாணு, பீலோமினு ஆகியோர் பணியாற்றினர்.

பதினைந்தாம் வயதில் மரியாயின் சேனை சகோதரிகளுடன் முதியோர் இல்லத்திற்கு செல்வது எமது செயல் திட்டங்களில் ஒன்று. எனது சகேதரிகளுடன் சென்று எம்மிடம் இருந்ததைப் பகிர்ந்து கொடுத்து மகிழ்வதில் எமது இன்பம் இருந்தது. சனிக்கிழமை தோறும் அது பழக்கப்பட்டது மட்டுமல்ல, ஏதோ ஒரு சக்தி என்னை ஈர்த்ததென்றே கூறலாம். நாங்கள் கொடுத்ததோ கொஞ்சம் வெற்றிலை, சிகரெட், பிஸ்கட் சாதாரண பொருட்கள். அவற்றைப் பெறும்போது அந்த சுருங்கிய முகங்களில் தெரியும் ஜோதி ஒளி எம்மைச் சுண்டி இழுத்தது. பலம் குன்றியிருந்த பெரியோர்களில் மட்டுமா எம்பார்வை சென்றது. அல்லும் பகலும் ஆனந்தமாக அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றி வரும் அருட் கன்னியர் மீதிலும் எம் பார்வை விழத்தவறியதில்லை. என்னை அறியாமல் என் உள்ளத்தில் இனம் தெரியாத உணர்வுகள் தலை தூக்கத் தொடங்கின. இந்த அழுக்குப் படிந்த வயோதிபருக்கு உதவி செய்வதென்றல் வேப்பங்காயாகக் கசந்தது. அதே வேளை அடுக்கடுக்காக எழுந்த கேள்விகள் என்னைக் குழப்பின. யார் இவர்கள்? வாழ்வை முடிக்கும் இந்த வயோதிபர் மத்தியில் எதனைக் கண்டு இப்படிப் பணியாற்றுகிறூர்கள். நாளும், பொழுதும் இந்த நலிந்தவர்களிடையே வாழ்வதில் அலுப்பேற்படுவதில்லையா? இருபது வருடங்கள் இதே பணிபுரிந்த ஒரு சகோதரியைக் கண்டேன். அது இன்னும் என்னைத் திகைக்க வைத்தது. இந்த வாழ்வின் இரகசியம்தான் என்ன? என்ன? எண்ணி எண்ணி ஈற்றில் இறையருள் என்னை ஆட்கொண்டது. இனம் தெரியாத புத்துயிர் என்னை ஆட்கொண்டது. வாரா வாரம் வழமைபோல் சந்திப்பு இடம் பெற்றது. நாளாந்தம் கண்ட புன்னகைகள் எனக்குப் புதுப் பொருளைத் தந்தன. நானும் ஒருநாள் திருச்சிலுவைக் கன்னிகையானல் .........அடிக்கடி தோன்றிய இந்த எண்ணத்தை அப்பாலே தள்ளிவிடுவேன். வயோதிபர் மடத்தில் வேலை செய்ய முடியாது எனும் பழைய பல்லவிகூட வரும், ஆயினும் எத்தனையோ இதர பணிகள் இருக்கும்தானே என்று, திருச்சிலுவைக் கன்னியாக வருவேன் என முடிவு செய்தேன்.

காலம் உருண்டோடியது. என் கனவும் நனவானது. திருச்சிலுவைக் கன்னியாக பதினைந்து வருடங்கள் பணி புரிந்து அதே பணித்தளத்திற்கு அனுப்பப்பட்டேன். எந்த வேலை என்னல் முடியாது என்று தவித்து நின்றேனே அதனை ஏற்று சேவிக்க வந்துவிட்டேன். எந்தவித ஈடுபாடும் விருப்பமுமோ இருக்கவில்லை. இந்த வேலை என்னல் முடியுமோ எனும் ஐயம் ஒரு புறம். மேலதிகாரிகள் வைத்திருந்த நம்பிக்கையும், பொறுப்பும் மறுபுறம். எனது உள்ளப் போராட்டம் சொல்லமுடியாத தவிப்பினை உருவாக்கியது. சிகரட்டின் நாற்றம் சிரசில் அடித்தது. வெற்றிலைச் சப்புக்கொட்டு என்னை வேதனையில் வாட்டியது. எச்சில் துப்பல் எட்டத்தில் நிற்க வைத்தது. ஆயினும் பணிவு என்னும் அருட்கொடையால் இந்தப் பணியை ஏற்றதாலோ என்னவோ பரமனின் அருட்கொடைகளால் பின்னே நிரம்பப் பெற்றவளானேன். ஆரம்பத்தில் சோர்வாகவே இருந்தது. அடிக்கடி எழுந்தது உளப்போராட்டம், நாட்கள் செல்லச் செல்ல இறையருள் என்னை வழிநடத்தியது எனக் கண்டுகொண்டேன். ஒருநாள் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு என் பராமரிப்பிற்கிருந்தவர்களைச் சந்திக்கச் சென்றேன். ஒரு வயோதிபமாதில் என் பார்வை நிலைத்தது; பாசத்திற்கேங்கிய பெண்மணி என்னை அழைத்தாள். வெறுப்புமேலிட்டால் விலகிவிட எத்தனித்தேன். முடியவில்லை. கால்கள் என்னை இழுத்துச் சென்றன. அருகே சென்றபோது அந்த முகத்தில் தோன்றிய மகிழ்ச்சி என்கரம்பற்றி தனது மெலிந்த சோர்ந்த அந்த முகத்தில் முத்தமிட்டு கண்ணீர் சிந்தியபோது என் கல் நெஞ்சம் மெழுகாக உருகியது. முன்னெருபொழுதும் இல்லாத பாச உணர்வு என்னைத் தட்டி எழுப்பியது. விளைவு அடிக்கடி அவர்களைத் தேடிச் செல்வேன். அங்கிருந்து இன்பங் கண்டேன். அடங்கிக் கிடந்த உணர்வு விஸ்வரூபம் எடுத்து வந்தபோதும் அதனை எதிர் கொள்ளத் தென்பு ஏற்பட்டது.

ஒரு குருட்டு வயோபருக்கு என்னில் அன்பு மேலிட்டது. நான் இருப்பதை கையால் உணர்ந்ததும் என் பெயர் சொல்லி அழைப்பது அவருக்குத் தனி இன்பம். திடீரென்று காய்ச்சலாக படுத்திருந்த அவர் ஒருநாள் நான் அருகிருந்த வேளை என்னைக் காறி உமிழ்ந்தார். என்றுமே வழி நடத்திய இறையருள் அவரை மன்னிக்கவும், இறுதிவரை அன்பு செய்யவும் எனக்கு உதவி செய்தது. என்னைப் பீடித்திருந்த இழிவான எண்ணம் என்னை விட்டு ஓடி மறைந்துவிட்டது.

நான் சந்தித்த குருடரும் முடவரும் எனது நற்சிந்தனைக்கு உணவாகினர். இறைவன் என்னையும் ஒருகுருடியாக முடப்பெண்ணுகப் படைத்திருக்கலாமே. ஏன் அப்படிச் செய்யவில்லை. அவர்களுக்குப் பார்வையாக, கரமாக கால்களாக, பார்க்கவும், செயற்படவும், ஈடுபடுத்தவேண்டுமென்றே என்னைப் படைத்தார் என ஆழமாக உணர்ந்தேன். அவரளித்த அளவிலா அன்புக்கொடைகளை எனக்கென மட்டும் வைத்திருத்தல் முறையல்லவே.

அநுபவமே சிறந்த ஆசிரியனல்லவா? இயலாதோர் மத்தியில் நான் பெற்ற அநுபவங்கள் ஏராளம். அவர்களின்சகிப்புத்தன்மைஎன்னே! அவஸ்தையின்போதுகூட அமைதி பொழியும் பார்வை. அந்த உருவமே இல்லாது உருக்குலைந்த பெண்மணிஇருக்கவேஇயலாது, எந்த நேரமும் நின்றபடி பட்ட வேதனைகளின் மத்தியில் வாழ்ந்த வாழ்க்கை. அதன் மத்தியிலும் சிந்திய அன்புப் புன்னகை எப்போதும் புனிதமாக எந்த சுகவாளியாலும் தூய்மையாக வைக்கமுடியாத அளவுக்கு தன் படுக்கையை வைத்திருந்த குருட்டுப் பெரிய

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## நன்றி நவில்கின்றேம் -

எமது பரலோக பாதுகாவலர் புனித சூசையப்பரின் பரிந்துரையால் நாம் கடந்த 50 ஆண்டுகளாக இறைவனிடம் பெற்றுக்கொண்ட சகல நன்மை உபகாரங்களுக்காகவும் நாம் இடைவிடாத நன்றி கூறுகின்றேம்.

மேதகு எங்கள் ஆயருக்கும் குருக்கள் துறவியருக்கும் எமது சகல உபகாரிகள், நண்பர்கள், ஆதரவர்கள் அனைவருக்கும் நாங்கள் பெற்றுக்கொண்டுவரும் சகல உதவிகளுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேம்.

தொடர்ந்து உங்கள் அனைவரின் ஆதரவையும் தாராள உதவியையும் எமது பணிக்கு இரந்து நிற்கிறேம்.

இறைவன் உங்கள் ஒவ்வொருவரையும் நிறைவாக ஆசீர்வதிக்கும்படி எமது முதியோருடன் இணைந்து இறைவனை பிரார்த்திக்கிறேம்.

கொழும்புத்துறை யாழ். திருச்சிலுவை கன்னியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்ல முதியவர் பேசுகிறார்....

காலம் போகப்போக வயதும் ஏற ஏற நாம் தமது முடிவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம் என்ற உண்மை மேற்படுவதுண்டு. நான் கைதடியில் உள்ள கட்புலன் இழந்தோர் பாடசாலையில் ஆசிரியையாக கடமையாற்றிக் கொண்டிருக்கும் வேளையில் இந்த நினைப்பு எனக்கும் வந்தது. எனது எதிர்காலத்தையும் எனது உடல் நிலையையும் எனது வயது வித்தியாசத்தையும் பார்த்த போது எனக்கு எல்லாமே கேள்விக் குறியாகத்தான் இருந்தன.

ஒரு நாள் நான் கடவுளின் துணையோடு ஆழமாகச் சிந்தித்த பின் எனது வேலையில் இருந்து ஓய்வுபெற்று கொழும்புத்துறை வயோதிபர் இல்லத்தில் என் வயதை ஒத்தவர்களோடு என் கடைசி நாட்களை அமைதியாகச் செலவிட வேண்டும் என்று முடிவு எடுத்தேன்.

இந்த இல்லத்தின் உள் சென்று பார்க்காதவர்களுக்காக இதன் உள்புற அமைப்பையும் ஒழுங்கு முறைகளையும் பற்றிய சிறு விளக்கம் தர விரும்புகிறேன். இது கடற்கரை ஓரத்தில் அமைந்திருப்பதால் மெல்லிய குளிர்ந்த இதமான காற்று விசேஷமாக மாலை நேரங்களில் வீசிக் கொண்டிருக்கும். உள்ளே நுழைபவர்களுக்கு வலப்புறத்தில் தேமாப் பூக்களும், இடப்புறத்தில் பல நிறக் கடதாசிப் பூக்களும் பூத்துநின்று வரவேற்கும். எப்போதும் அழகாகவும் துப்பரவாகவும் இருக்கும் இந்த இல்லத்தில் இருப்பதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இந்த இல்லம் திருச்சிலுவைக் கன்னியர்களால் நடத்தப்படுகிறது. இங்கு இருப்பவர்கள் யாராக இருந்தால் என்ன,—ஆண்கள் என்றால் என்ன, பெண்கள் என்றால் என்ன, — வறியவர் என்றால் என்ன, செல்வர் என்றால் என்ன, படித்தவர் படிக்காதவர் என்றால் என்ன —எல்லாருக்கும் ஓரே வித அன்பும் பாசமும் கவனிப்பும் பொறுமையும் காட்டுவது ஒரு சிறப்பம்சமாகும். மனதிலே அமைதி குலைந்தவர்கள், உடல் நலம் அற்றவர்கள் கை கால் ஊனமுற்றவர்கள் எல்லோருக்கும் இங்கு இடம் கொடுக்கப்படுகிறது. படித்தவர்களும், நல்ல நிலையில் இருந்தவர்களும் இப்போ அவர்களின் குடும்பங்களால் வெறுக்கப்பட்டு இங்கு இருப்பதையும் நீங்கள் காணலாம். கன்னியர்கள் ஒவ்வொரு வயோதிபரையும் அணுகி அவர்களுக்கு அன்பும் ஆறுதலும், மகிழ்ச்சியும் கொடுப்பது மனதைத் தொடும் காட்சியாகும்.

ஞானக் காரியங்களுக்கு இங்கு முக்கிய இடம் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு நாளும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு நாளும் செபமாலை மூன்று முறை சொல்லப்படுகிறது. ஒவ்வொரு முதல் வெள்ளிக் கிழமைகளிலும் நற்கருணை எழுந்தேற்றம் நடைபெறும். அங்கிலிக்கன் சபையைச் சேர்ந்தவர்களுக்காக ஒரு பாதிரியார் மாதம் ஒருமுறை வந்து வழிபாடுகள் நடத்துகிறார்.

வருத்தமாக இருப்பவர்களுக்கும் மரணத்தறுவாயில் இருப்பவர்களுக்கும் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது. மரிப்பவர்களுக்கு உரிய ஒழுங்குகளுடன் மரணச்சடங்குகள் நடத்தப்படுகிறது.

இறை வாசிப்பவர்களே உங்கள் கவனத்தை எம்மேல் திருப்பும்படியும் உங்கள் உதவிகளையும் செபங்களையும் எமக்குத் தரும்படியும் கனிவாக வேண்டுகிறேன். உங்கள் நட்பும் அன்பான உற்சாக மூட்டும் வார்த்தைகளும் உங்கள் தாராளமான செயல்களும் எங்கள் தனிமையைப் போக்கி எங்கள் வாழ்வை மகிழ்ச்சியாக நீண்ட நாட்களுக்குக் கொண்டு செல்லும்.

எங்களை நினைத்து உங்கள் ஆசைகளைக் குறைத்து எங்களுக்கு அன்பளிப்புக்களை அனுப்புவோருக்கும் தங்கள் நேரத்தையும் சக்தியையும் பாராது எங்களை மகிழ்ச்சிப் படுத்த எங்களுக்குக் கலை நிகழ்ச்சிகளை அமைத்துத் தரும் பாடசாலைகளுக்கும், கிளப்புகளுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம். உங்கள் இரக்கத்தை நாம் பாராட்டுகிறோம். உங்கள் சொற்களும் செயல்களும் எமக்கு அமிர்தமாக இருக்கின்றன. ஈற்றில் எம்மைப் பராமரிக்கும் கன்னியர்க்கும் துணையாளர்களுக்கும் நன்றி கூறுகிறோம். இப்படியான ஓரிடத்தை நீங்கள் வைத்து நடத்துவதில் அனுபவிக்கும் துன்பங்களை அறிந்து நன்றி கூறுகிறோம்.

பூரணம் வீனிபிறெட்
மாரிமுத்து

# எமது பணிக்கு உங்கள் பங்களிப்பு

நரைத்துத் திரைத்துக் கனிந்து பழுத்த நம் முதியவர்கள் இவர்கள். தனிமை, ஏக்கம், வெறுப்பு, தவிப்பு, உதவியின்மை ஆகியவற்றால் அல்லற்படுகிறார்கள். குடும்பம் தாபரிக்கவில்லையே, சுற்றம் பராமரிக்கவில்லையே, என்ற ஏக்கமும் தாக்கமும் இவர்களை வாட்டி வதைக்கின்றன. இக்குறைகளை நீக்கவும், மனித மாண்புடன் தங்கள் அந்திய நாள்களை அமைதியுடன் நோக்கவும், மனமகிழ்வுடனும் நிறைவுடனும் பாக்கியமாக இறைவன் கரங்களில் தம்மைஅர்ப்பணித்துச் சேர்க்கவும் இவர்கள் ஆசித்து நிற்கிறார்கள்.

இன்றைய காலகட்டத்தில் இவ்வில்லத்தைப் பராமரித்தல் மிகவும் கடினமான பாரிய பொறுப்பாய் உள்ளது. பெருந்தொகைப் பணம் தேவைப்படுகிறது. அரசாங்கம் எட்டில் ஒரு பகுதியை நன்கொடையாக உதவுகிறது. இன்னும் ஒரு பகுதியை எமது ஆதரவாளர்களும், உபகாரிகளும், நண்பர்களும் தந்து உதவுகின்றனர். முழுத் தொகையில் ¾ பகுதியை எம் ஆயரும் திருச்சிலுவை கன்னியரும் தேடவேண்டி இருக்கிறது. ஆண்டுதோறும் 4½ இலட்சம் ரூபாவுக்கு மேல் சாதாரண செலவுகளுக்கு வேண்டியுள்ளது. எனவே தான் பொதுமக்களின் கூடிய பங்களிப்பை நாம் எதிர்பார்க்கவேண்டியுள்ளது. குறிப்பாக, மரணச் சடங்குகள் நடைபெறும்போது எங்கள் வயோதிபரை நினைத்துப் பணமாகவும் பொருள்களாகவும் இறந்தவர்கள் பெயரால் கொடுத்து உதவும் தியாகப்பண்பு மிகச்சிலரிடம் இருக்கிறது. இந்தத் தயாள மனப்பான்மையை மற்றவர்களும் பின்பற்றுவது மனமார விரும்பத்தக்கது ஒன்றாகும்.

எங்கள் முதியோர் இல்லங்கள் மழைகாலத்தில் உபயோகத்திற்குத் தகுதியற்றனவாகக் காணப்படுவதாற் பெருமளவு புனருத்தாரண வேலைகள் செய்யப்படவேண்டிய நிலையில் உள்ளன. இதற்கு அதிக செலவு ஏற்படும். இன்னும் மேலதிக இடவசதியையும் அமைக்கவேண்டிய நிலையும் உண்டு.

எம்நாட்டின் நெருக்கடி நிலை காரணமாகவும், இன்றும் குறிப்பாக எமது பிரதேசங்களில் இடம்பெற்ற பாதிப்புகளின்விளைவுகளாலும் எண்ணரிய குடும்பங்கள் குடிபெயர்ந்துள்ளன. பிறநாடுகளுக்கும் பலர் சென்றுவிட்டார்கள். இத்தகைய குடும்பங்களின் முதியவர்கள் பலர் பாதுகாப்பும், பராமரிப்பும், இன்றி எங்களிடம் தஞ்சம் கேட்டு வருகின்றார்கள்.

இன்று நாம் கொண்டாடும் பொன்விழாவை முன்வைத்து மேலதிகமான பொன்விழா விடுதிச்சாலை ( Golden Jubilee Block ) ஒன்றை நிர்மாணிக்கலாமே என்று உபகாரிகள் சிலர் விரும்புகின்றார்கள். இந்த நற்செய்தியை நாங்கள் மனமுவந்து வரவேற்கிறோம். தனி அறைகள் உள்ளிட்ட அத்தியாவசிய வசதிகளுடன்கூடிய ஒரு சாலை எம் வயோதிபர்களுக்கு அரும் பெரும் வரப்பிரசாதமாய் அமையும் என்பதில் ஐயமில்லை.

எனவே, எங்கள் அன்பர்கள், ஆதரவாளர்கள், உபகாரிகள் அனைவரையும் இறந்து போன உங்கள் பெற்றோர், உற்றார் பெயரால் ஓர் அறையை அல்லது வேறு வகையில் உதவிகளைத் தந்து இந்த நற்பணியைச் சிறப்பிக்க வேண்டி நிற்கிறோம். எங்கள் முதியோரின் இறுதி நாள்களை அவர்கள் மகிழ்வுடனும், மன நிறைவுடனும் செலவிட உங்கள் தாராள உதவியை மனங்கனிந்து தாருங்கள். எங்கள் தேவைகளைப்பற்றி மற்றவர்களிடமும் எடுத்துக் கூறுங்கள். இந்தப் பணியானது இறைவனுக்கு உகந்தது; இறந்தவர்களுக்குச் சாந்தி அளிப்பது; மிகவும் உன்னத பணியும் ஆகும்.

# வயது முதிர்ந்த காலத்தில்....

அனாதைகளாகவும் யாருமற்றவர்களாகவும் கவனிப்பாரற்று தள்ளி விடப்படும் ஆண்களையும் பெண்களையும் அன்போடு அணைத்து அன்பும் ஆறுதலும் மன அமைதியும் கொடுத்து அவர்களின் தனிமையைப் போக்கி அன்றாட தேவைகளைக் கவனித்துவரும் புனித சூசையப்பர் வயோதிபர் இல்லம் தன் ஐம்பதாவது ஆண்டைப் பூர்த்தி செய்கின்றது.

ஆரம்பத்தில் புத்த சமயத்திலிருந்தபின் கிறிஸ்தவ மதத்தின் மேல் பற்றுக் கொண்டு கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிய திரு. டொன் ஜோசப் தம்பதிகளின் அன்பளிப்பால் கிடைத்த இந்த இல்லத்தை 1935ம் ஆண்டு கார்த்திகை 27ஆம் நாள் கியோமார் ஆண்டகை அவர்கள் ஆசீர்வதித்து திறந்துவைத்தார்கள்.

ஏழு ஆண்களை மட்டும் கொண்டிருந்த அந்த வயோதிபர் இல்லத்தை பொறுப்பேற்று நடத்த கியோமர் ஆண்டகை அவர்கள் திருச்சிலுவைக் கன்னியரை நாடினார். இந்தியாவிலே மாகாணத் தலைமை மடத்தை கொண்டிருந்தாலும் ஊர்காவற்றுறை அரசினர் மருத்துவமனையில் தாதிகளாய் தனிச்சிறப்புடன் சேவையாற்றிக் கொண்டிருந்த இவர்கள் இப்பொறுப்பை மகிழ்வோடும் விருப்பத்தோடும் ஏற்றுக் கொண்டார்கள்.

வயோதிபர்கள் ஆண்களும் பெண்களுமாக நாளடைவில் எண்ணிக்கையில் அதிகரிக்கவே பல வசதிக் குறைவுகள் ஏற்பட்டன. அரசாங்க உதவிகளும் கிடைக்காத படியால் கன்னியர்கள் வீடு வீடாகச் சென்று தருமம் பெற்று தங்கள் சேவையைத் தொடர்ந்தார்கள். அதன்பின் கன்னியருக்கென்று ஒரு விசேட இடமும் வேறு பல கட்டிடங்களும் நிர்மாக்கணிப் பெற்றன. இதனால் இந்த இல்லம் பெரிய வளர்ச்சியடையத் தொடங்கியது.

இந்த இல்லத்தை அன்பளிப்புச் செய்த திரு. டொன் யோசப் தம்பதிகளும் தங்கள் வயோதிப காலத்தில் அங்கு வந்து தங்கி இருந்து தமது இறுதி நாட்களை மகிழ்ச்சியாகக் கழித்து பாக்கியமாக மரித்தார்கள். கடந்த 50 ஆண்டுகளாகப் வயோதிபருக்கு அன்புப்பணி புரிந்துவந்த கன்னிகை அகத்திரு இன்றும் நம் மத்தியில் இருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

எமது இல்லத்து வயோதிபர்கள் தங்கள் விருத்தாப்பிய காலத்தில் இறைவனை உருக்கமாக வேண்டிக் கேட்கும் வரங்களை எங்கள் உபகாரிகளுக்கு அதிசயமான முறையில் பெற்றுக் கொடுத்து வருகின்றார்கள். என்வே இவர்களின் செப உதவியை வாழ்வோரும் மரித்தோரும் பெற்று இதற்கு கைமாறாக தாரளமாக எமது இல்லத்திற்கு உதவியும் செய்து வருகின்றார்கள். இவர்கள் அனைவரையும் நாங்கள் நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

இவ்வாறு இறை பராமரிப்பால் வழிநடத்தப்பட்டு இறை பாதத்தில் மக்களை கொண்டு சேர்க்கும் அன்புப் பணியில் சேவையாற்றி வரும் திருச்சிலுவைக் கன்னியர் இன்னும் பலருடன் பலகாலம் சேவை செய்ய விரும்புகிறோம்.

# இல்லத்தின்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வர். எத்தனையோ பேரைக் குறிப்பிடலாம். ஒவ்வொரு சொல்லுக்கும், செயலுக்கும் அவர்கள் காட்டிய நன்றி உணர்வு. நன்றிபற்றித்தெரிய வேண்டுமானால் அவர்களிடம் போகவேண்டும் என நான் என் சகோதரிகளுக்குக் கூறுவேன்.

ஆம் இறை அன்பினால் இணையப்பெற்று, அவர் அன்புக்காக எம்மை அர்ப்பணித்து இறைத் திட்டத்தை நிறைவு செய்ய, ஓரேகுடும்பமாக. குழுவாக செயற்படுகின்றோம். எமது மூத்தோருக்கு அன்பையும், பாசத்தையும் இறுதி வரை அள்ளி வழங்க எமது வார்த்தையால் மட்டுமல்ல, வாழ்வினாலும் அவர்களை வழிகாட்ட இறைவனை அடைய அவர்களை ஆயத்தப்படுத்துகிறோம், இந்த இடைவிடாத இனிய பணி ஒவ்வொரு சகோதரர்களையும் இறையருள் எப்போதும் பிரசன்னமாக இருக்கவும் அவரது சக்தியிலும், சந்தோஷத்திலும் செயற்படவும் தூண்டுகிறது.

புனித வளனார் வயோதிபர் இல்லம் இருபது பேரைப் படுத்த படுக்கையாகக் கொண்ட 85 இயலாதோரை ஆதரிக்கிறது. எண்ணிறந்தோர் தேடிவந்தபோதும் இடவசதிஇன்மை அவர்களை ஏற்க மறுக்கின்றது. எமது இயலாமையைக்கூறி அனுப்பும்போது நாம் படும் [illegible]

# அழைப்பின் குரல் கேட்டேன்...

## அது சிலுவையின் நிழலில்

திருச்சிலுவைப் பலியின் விலைமதிப்பற்ற பேறு பலன்களை எல்லா மக்களும் பெற வேண்டுமென்பதே திருச்சிலுவை கன்னியரின் பணி.

இறைவனின் குணமாக்கும் வல்லமையை துன்புறும் மக்களுக்கு கிடைக்கச் செய்து நோய் உற்றோரின் துயர்துடைத்து ஆரோக்கியமும், ஆறுதலும், அன்பான பராமரிப்பும் அளிப்பது எமது அழைப்பு.

இப்புனித அழைப்பை ஏற்க விரும்பும் தகுதியுள்ள எமது சிறிய சகோதரிகளை அன்புடன் வரவேற்க காத்திருக்கிறோம். திருச்சிலுவை கன்னியராக வர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

மாகாணத்தலைவி
திருச்சிலுவை கன்னியர் மடம்
பீச் றோட்,
யாழ்ப்பாணம்.

இடப்பற்றுக்குறையும் பணியாளர் பற்றுக்குறையும் இறைவனையே தஞ்சமெனக்கொள்ள வைக்கின்றது. இன்று எம் சேவைக்கு சகோதரிகள் தேவை.

இறைவன் உன்னைக்கூட இப்பணிக்கு அழைக்கலாம். தனது மக்களுக்கு மகிழ்வளிக்க, ஆறுதளிக்க அழைக்கலாம், அவர் உன்னிடம் உள்ளவைகளை தன் மக்களோடு பகிர்ந்துகொள்ளக் கேட்கின்றார், இதோ அவரது குரல்

பசியென்று துடித்தேன் நீ
உணவளித்தாய்
வசி யென்று இடமும் நீ
எனக்களித்தாய்
தாகத்தை போக்க நீ
நீரளித்தாய்
சோகத்தை அகற்ற நீ
மொழி உரைத்தாய்
எனவே, தந்தையின் பேரரசில்
உனக்கோர்
இடமுண்டு உறுதி இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் குரல்

## மக்களை ஆட்சி செய்வதற்கும் பாதுகாப்பதற்குமான தகைமைகள்

எமது சத்திய வேத திருச்சபை வன்முறைகளை என்றுமே ஆதரித்ததில்லையென்பதும் ஆனால், ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலையைப் பொறுத்தமட்டில் காரிய சாத்தியமான வழிகளில் மக்களை வழிநடத்தி ஊக்கப்படுத்துகிறது என்பதும் கண்கூடு!

விடுதலைப் போராட்டங்களை முன்னெடுத்துச் சென்று விடுதலை பெற்றுக் கொடுத்தவர்கள் — தலைவர்கள் — ஒரு பொது நோக்கில் செயற்பட்டமையால் தமது மக்கள் உண்மையான விடுதலையை அனுபவிக்கச் செய்தார்கள் என்பதையும்; அன்றி, பல்வேறுபட்ட சித்தாந்தங்களின் கீழ் பிரிந்து நின்று போராடுபவர்கள் தமது மக்களுக்கான விடுதலையை இன்னும் பெறாதிருப்பதையும், விடுதலை பெற்றிருந்தும் தமக்கிடையே தொடர்ந்தும் மல்லுக் கட்டிக்கொண்டு தம் சொந்த மக்களையே அழித்துக் கொண்டிருப்பதையும் கடந்தகால மற்றும் நிகழ்கால சம்பவங்களிலிருந்து நிதர்சனமாக அறிகிறோம். அண்மைக் கால வரலாற்றில், அங்கோலா, சம்பூச்சியா, உகண்டா, சிம்பாப்வே என்பன இதற்கு நல்ல உதாரணங்கள்.

18-10-85 பாதுகாவலனில் தாங்கள் குறிப்பிட்டது போல், ''மக்களை ஆட்சி செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் சில தகைமைகள் வேண்டும்'' என்ற கருத்தை நானும் பலமாக ஆதரிக்கிறேன். நமது இனத்தின் விடுதலைப் பாதையில் தகைமையானவர் யார். தகைமையற்றவர் யார் என்பதையிட்டு இத்தருணத்தில் விவாதிப்பது அர்த்தமற்றதாகும். ஏனெனில் காரியம் முற்றி. 'தடியெடுத்தவன் தண்டப் பிரசண்டன்' என்ற வகையில் தற்போதைய நிகழ்வுகள் அமைகின்றன. அதனால் நிலைமையை மேலும் மோசமடைய விடாது பார்த்து எம் இனத்தைக் காக்க வேண்டியது எம் கடமையாகிறது. யார் தகுதியானவர்கள் என்பதையிட்டு ஒடுக்கப்பட்ட அந்த வெகு சனங்களே தீர்மானிக்க முடியும். ஆயினும் விடுதலைக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்பவர்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகளையிட்டு எமக்கு இப்போதுதான் கவலை ஏற்பட்டுள்ளது என்றும் கருத இடமுண்டு. தமிழ்ப்பிரதேசங்கால், அந்நியர் அல்லாத, எம்மவரினாலேயே மேற்கொள்ளப்படும் அழிவுச் செயல்களையிட்டுப் பெருமளவில் கவலைப்படும் நாம், அனுபவமிக்க தலைமைத்துவத்தின் கீழ், மக்களை - குறிப்பாக - இளைஞர்களை ஒன்றுசேர்க்கவும் கட்டுக்கோப்புடன் இயங்கச் செய்யவும் தீர்க்கதரிசனத்துடன் செயலாற்றுது இருந்திருக்கிறோம் என்பதை ஒப்புக்கொண்டேயாக வேண்டும்..

வடக்கு, கிழக்கு என்ற பிரதேச வேறுபாடின்றி, தமிழ் மக்களை, பெருமளவில் ஒரு குடையின் கீழ் கொணர்ந்த, இன விடுதலையை உணர்த்திய மூத்த தலைவர்களிலும் அவர்கள் சார்ந்த இயக்கத்திலும் கண்ட சிறிய குறைகளை, அவர்களின் மிதவாதப் போக்கை பெரிது படுத்திப் பகிரங்கப் படுத்தவும், ஈழத்தின் வெகு சனத் தொடர்புச் சாதனங்களும்—குறிப்பாக நமது மக்களுக்கென்றே இயங்கும் உள்ளூர்த் தமிழ்ப் பத்திரிகைகளும் பின் நிற்கவில்லை அதேநேரத்தில், அவர்களின் சேவைகளை பொதுநல நடவடிக்கைகளை ஆதரித்து ஊக்கப்படுத்திய கட்டங்களும் மிகமிகக்குறைவு. ஆயினும், அவர்கள் சோர்ந்துவிடவில்லை; தன்னலம் நோக்காது தொடர்ந்தும் செயற்படும் அத்தலைவர்கள் இந்நிகழ்வுகளால் மனம் தளர்ந்துவிடவில்லை; தீவிரவாத நடவடிக்கைகளுக்கோ, தமது உயிர்களுக்கோ பயந்து மக்களை விட்டு ஒதுங்கிவிடவுமில்லை.

எனவே, எம் இனத்தை அழிவுப் பாதையில் நின்றும் காப்பாற்றக்கூடிய தீர்க்கதரிசனத்துடன் செயலாற்றும், அனுபவமிக்க, தகைமையுள்ள தலைவர்களைக் கொண்ட இயக்கத்தினை இனங்கண்டு அதன்கீழ் ஒன்று திரண்டு போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல இளைஞர்கள் இனியும் பின் நிற்கக்கூடாது. இளைஞர்களின் தீரமிக்க செயல்திறனும் அனுபவமிக்க தலைவர்களின் வழி நடத்துதலும் எம் இனத்திற்கு இப்போது மிகவும் அவசியமாகிறது.

தென் வியட்நாமில் இருந்து அமெரிக்கத் துருப்புக்களும், கிழக்குப்பாகிஸ்தானில்இருந்து பாகிஸ்தான் துருப்புக்களும் விரட்டி அடிக்கப்பட்டதற்கு அம்மக்களின் ஒன்றுபட்ட எழுச்சியும் கட்டுக்கோப்புடன் கூடிய தலைமையின்கீழ் இயங்கியமையும்தான் காரணம் என்பதும்; பல குழுக்களாகப் பிரிந்து நின்று போரிட்டுச் சுதந்தரம் பெற்ற அங்கோலா, சிம்பாவே நாடுகளின் மக்கள் சுதந்தரத்தின் பின்னரும் தமக்குள்ளே சண்டையிட்டு அழிந்து கொண்டிருப்பதும் தமிழ் இனத்திற்கு ஒரு பாடமாக அமைய வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் நமது மக்களை —குறிப்பாக— இளைஞர்களை வழிநடத்துவாராக!

— யோக்கிம்
மன்னார்.

---

### விண்ணக வாழ்வின் பத்தாவதாண்டு நினைவஞ்சலி



C. V. எட்வேட்
நவரத்தினசிங்கம்
அன்னை மடியில்: 16-02-1908
ஆண்டவன்அடியில்: 1-12-1975

வாழவழிவகுத்து வசையிலா
வாழ்வு வாழ்ந்து
நாளும் நினைந்துருக நலம்
புரிந்து - மீளாத
நித்தியத்துள் நிலைத்த ஆண்
டவரைந் தெனினும்
உத்தமரே எங்கள் உயிர்

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக செபிக்குமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்
A/203 மருகர், பேரர்

---

### முதலாம் வருட ஞாபகம்
### 03-12-85



ஆசிர்வாதம் அம்புரோஸ் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் 30 வருடங்கள் சக்கிறிஸ்தியனாகப் பணி புரிந்தவர்.

இரக்கம் நிறைந்த கர்த்தாவே, எம்மை விட்டுப் பிரிந்து உம் திருவடிகளைச் சரணடைந்த உம் அடியானுக்கு நித்திய இளைப்பாற்றி அளித்தருளும்.

அன்னாரின் இளைப்பாற்றிக்காக மார்கழி 3-ம் திகதி சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

மனைவி, மக்கள்,
உற்றார்
சுன்னாகம் A/202

---

### முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



திரு. சந்தியாப்பிள்ளைபெனடிக்ற்
(செல்வம்)
தோற்றம்: 26-08-48
மறைவு 05-12-84

''உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன்இறப்பினும் வாழ்வான்''
(அரு 11:25)

இரக்கத்தின் ஊற்றாகிய இறைவா,

உமது பக்தனும் எம் அன்புச் சகோதரனுமாகிய செல்வம் எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு நிறைவேறும் இவ்வேளை நன்றிப் பெருக்குடன் அவருக்கு நினைவஞ்சலி செய்து, அவர் உமது மலரடி இணைய உம் அமைதியை அனுபவிக்க, உமது அன்புப் பிரசன்னத்தில் என்றும் வாழ கருணை மழை பொழிந்திடக் கண்ணீருடன் உம்மை மன்றாடுகிறோம்.

எதிர்வரும் 5-12-85 வியாழக்கிழமை காலை 7-30 மணிக்கு கன்னாட்டி, புனித வளனார் ஆலயத்தில் இவரது நினைவாக திருப்பலி ஒப்புக் கொடுக்கின்றோம்.

இவரது பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், தந்தை
சகோதரர்கள்
செட்டிகுளம். A/189

---

### முதல்வருட நினைவஞ்சலி
ஜோண் பப்ரிஸ்ட் அருள்மலர்



பிறப்பு : 3-4-56
மறைவு: 4-12-84

ஆண்டொன்று மறைந்த தம்மா வேண்டிநிற்கும் எம் மனதில் உம் அன்புமுகம் மறையவில்லை.

நிர்மலனின் பொன்னடியில் நீடுவாழ்க!

4-12-85 காலை 7-30 மணிக்கு நவாலி புனித பேதுரு ஆலயத்திலும் பரப்பாங்கடல் புனித சித்தாத்திரை மாதா ஆலயத்திலும் நடைபெறும் இரங்கற்பலியில் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், மகன், உறவினர், நண்பர்கள்
நவாலி A/201

---

### 6வது வருட நினைவஞ்சலி.

திருமதி. திரேசாபுஸ்பம் பயஸ்
மலர்வு 17-10-1925
உதிர்வு 3-12-1979

வாழ்ந்தாலும் ஆண்டவருக்கென்றே வாழ்கின்றோம். இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கின்றோம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 4-12-85 புதன் கிழமை காலை 6 மணிக்கு யாழ் அடைக்கல மாதா ஆலயத்தில் இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்.

கணவன், மக்கள்
மருமக்கள்
A/200 பேரப்பிள்ளைகள்.

---

### நினைவஞ்சலி



சாள்ஸ் மாசலின் பிலிப்
ஆண்டவன் படைப்பு
16-1-1932
ஆள்பவன் அழிப்பு
5-10-1985

தீயவர் உன்னை தரணியிலிருந்து அழித்திட்டாலும்
அன்பாலும் பண்பாலும்
வாழ்ந்து எம்மை ஆறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு சென்ற இவ்வேளையில் உம் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஆகுலத்தால் அல்லலுறும்
மனைவி, மக்கள்,
சுற்றத்தார்
வத்தளை. A/204

---

## மீண்டும் 'இறையியற் கோலங்கள்'

ஈழத்தின் முதல் தமிழ் இறையியற் சஞ்சிகையான, ''இறையியற் கோலங்கள்'' நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் வெளிவருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம். இச் சஞ்சிகையைச் சிறப்பிக்கும் வண்ணம் இறையியல் சம்பந்தப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள், சிந்தனைகள் மற்றும் பல ஆக்கங்களை இறையியல் எழுத்தாளர்களிடமிருந்து ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:—

அருட்திரு எஸ். ஜே. இம்மானுவேல்
ஆசிரியர், ''இறையியற் கோலங்கள்''
தேசிய குருத்துவக்கல்லூரி
அம்பிட்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'மெசியா'வை காணுவோம்

'தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்' எகிப்திய அடிமைத்தனத்தில் அன்று வருந்தினர். ஆனல் இறைவன் அவர்களை மீட்டு எடுத்தார்.

பின்னர் அவர்கள் பபிலோனியருக்கு அடிமைகளாயினர். மீண்டும் இறைவன் அவர்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்தார்.

கடவுள் அந்த மக்களைக் கண்ணை இமை காப்பது போலக் 'காத்து, மோயீசன் முதலிய தமது தூதுவர்கள் மூலம் எல்லாத் துறைகளிலும் வழிநடத்தி, வாக்களித்தபடியே ''பாலும் தேனும் பொழியும்'' கானன் நாட்டிற்கு உரிமைக்குடி மக்களாக்கினர்.

திரும்பவும் அவர்கள் உரோமையருக்கு அடிமைகளாயினர். உலக பந்த பாசங்களாலும் கொள்கை வேறுபாடுகளாலும் தம்முள் பிரிவினைப்பட்டு நின்ற அந்த மக்கள், சிறந்த கல்வியறிவு பெற்றவர்கள் பலர் அவர்களுக்குள் இருந்தும், தீர்க்கதரிசிகளால் தெளிவுற முன்னறிவிக்கப்பட்ட 'மெசியா'வை தங்கள் மனப்போக்கின் பிரகாரம் எதிர்பார்த்தனர். இரணகளத்தில் கடுஞ் சமராடி வெற்றி வாகை சூடி, உரோமையரின் அடிமைத் தனத்திலிருந்து தம்மை மீட்டு, மகோன்னதமான ஒரு பேராசை நிறுவப் போகும் ஒரு ''விடுதலை வீரனை'' அவர்கள் எதிர்பார்த்தனர்.

மீட்பர் இயேசு ஏழ்மையிலே பிறந்தபோது அவர்கள் அவரை இனம் கண்டுகொள்ளத் தவறினர். வரலாற்றிலே, வரலாற்றைக் கடந்தவராக அவதரித்த உலக மீட்பரை-காலம் காலமாக எதிர்பார்த்திருந்தவரை தங்கள் இஷ்டப் பிரகாரம் நோக்கின நோக்கிலே கண்டுகொள்ளவில்லை! அவர்களுடைய சமய-இதிகாச - இலக்கிய – வானசாத்திர - சோதிட - கணித அறிவும், தீர்க்கதரிசிகளுடைய முன்னறிவிப்புக்களும் அவர்களுடைய இஷ்டப்படி வளைந்து கொடுக்காமையினல் அவதரித்த 'மெசியா'வை புரிந்து கொள்ளும் வாய்ப்பற்றவராயினர்.

இறைவனுடைய செயலாற்றலை-மீட்புத் திட்டத்தை-மனிதனுடைய செயலாற்றலுக்கும் திட்டத்துக்கு மியைய அமைய வேண்டுமென ஆசித்து எதிர்பார்த்தனர். இதனல் கிறிஸ்துவை அவரது பாணியில் ''மெசியா''வாக ஏற்றுக்கொள்வது இயலாத விடயமாயிற்று. இயேசுவின் வறுமை, அன்பு, நட்புடைமை, இரக்கம், நீதி, நல்லுபதேசம், புதுமைகள் யாவும் அவர்களுடைய பகட்டு, அகங்காரம், பணஆசை, போலித்தனம், பிடிவாதம், கல்நெஞ்சம் முதலியவற்றுடன் இணங்கிப் போகவில்லை.

மற்றுமொரு கிறிஸ்து பிறப்பு பெருவிழாவை அண்மித்துக் கொண்டிருக்கும் நாம், எமது இன்றைய அரசியல், பொருளாதார, சமய, சமூக மனப்பாங்கு-சூழ்நிலைகளுடன் எம்மைக் கிறிஸ்துவின் முன்வைத்தால் நாம் அவரை இனம்கண்டு இணங்கி நிற்போமா, பிணங்கிப் பிரிவோமா என்று சிந்திக்கவேண்டும்.

பலவிதமான விடுதலையையும் உரிமைகளையும் கோரி எதிர்பார்த்திருக்கும் நாம் இறைமகன் யேசுவில் நம்பிக்கை இழக்காமல், இறைவன் தரும் விடுதலை – அவருடைய செயல் திட்டம் - எதுவெனக் கண்டுணர்ந்து எமது போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இறைவனை ஒதுக்கிவிட்டு நமது சிந்தனை செயற்பாடுகளில் மட்டும் நம்பிக்கைவைத்து பிரிவினைப்பட்டு நிற்போமாயின், அன்றிருந்த மக்களைப் போலவே நாமும் தொடர்ந்து அடிமைத்தனத்தில் வாடலாம்.

### எம் கருத்து

## திருவருகைக்கால இரண்டாம் ஞாயிறு

### 8-12-85

பாரூக் 5: 1—9.

பபிலோனிய அடிமை வாழ்வு முற்றுப்பெற்று துன்பத்தால் திருத்தப்பட்ட இஸ்ராயேல் மக்கள் மகிழ்ச்சியோடு தாயகம் திரும்புவர். யெருசலேம் மீண்டும் தண்ணொளி வீசி மாட்சிமையோடு விளங்கும் என்று முன்னறிவிப்பதாக இவ்வாசகம் அமைந்துள்ளது. எனினும் கிறிஸ்துவின் மறு வருகையின் போது புதிய யெருசலேமாகிய திருச்சபை அடையப்போகும் மாட்சியும் இங்கு மறைமுகமாக முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பியர் 1: 4—6, 8—11,

இவ்வாசகத்தில் புனித சின்னப்பர் இருமுறை 'கிறிஸ்துவின் நாள்' பற்றிக் குறிப்பிடுகிறுர். முதலில் பிலிப்பி நகர் மக்களில் இறைவன் தொடங்கியுள்ள நற்பணியைக் கிறிஸ்துவின் நாள்வரை தொடர்ந்து செய்து நிறைவுபெறச் செய்வார் என்ற நம்பிக்கையை அவர் வெளிப்படுத்துகிறுர். அடுத்ததாக, கிறிஸ்துவின் நாளை எதிர்நோக்கி அவர்கள் குற்றமற்றவர்களாக வாழ வேண்டும் என்று தாம் மன்ருடுவதாக அவர் கூறுகிறுர். இவ்வாறு அவர் கிறிஸ்தவ வாழ்வு கிறிஸ்துவின் மறுவருகையை எதிர்நோக்கிய வாழ்வாக அமையவேண்டும் எனக் கற்பிக்கின்ருர்.

லூக்காஸ் 3: 1—6.

கிறிஸ்துவின் முதல் வருகைக்கு மக்களை ஆயத்தம் செய்வதற்கு அனுப்பப்பட்ட புனித ஸ்நாபக அருளப்பரைப் பற்றி இங்கு கூறப்பட்டுள்ளது. இவரைப் பற்றி இசையாஸ் இறைவாக்கினர் முன்னறிவித்ததற்கொப்ப இவர்மக்களை மனந்திரும்புமாறு தூண்டி அவர்களைக் கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தம் செய்தார் என்று இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது,

சிந்தனைக்கு

அன்று மக்கள் கிறிஸ்துவின் முதல் வருகையை எதிர்பார்த்திருந்தனர். அதற்கு அவர்களைப் புனித ஸ்நாபக அருளப்பர் ஆயத்தம் செய்தார். இன்று நாம் கிறிஸ்துவின் மறு வருகையை எதிர்நோக்கி நிற்கின்ருேம். அதற்கு ஆயத்தம் செய்யுமாறு திருச்சபை நம்மை அழைக்கின்றது. இன்று சாதிப்பாகுபாடு, பொருளாதார ஆதிக்கம் போன்ற அநீதியான சமூக அமைப்புக்களின் காரணமாகச் சமுதாயத்திலே மேடு பள்ளம் போன்று விளங்கும் ஏற்றத்தாழ்வுகள் நீங்கவேண்டும்; உண்மையான சமத்துவமும் சகோதரத்துவமும் சமூதாயத்தில் நிலைநாட்டப்படவேண்டும். இதற்கு முதலில் தனி மனிதரிலே உண்மையான மனமாற்றம் ஏற்படவேண்டும். 'நான்' என் மமதையான மனப்பான்மையையும் 'எனக்குத்தான் எல்லாம்' என்ற சுயநலப்போக்கையும் நாம் கைவிட்டு பரந்த பொதுநல மனப்பாண்மையைப் பெற்றுக்கொள்ள வேண்டும், அப்போது தான் சமத்துவமும் சகோதரத்துவமும் நிலவும் ஓர் புதிய சமுதாயமாக, புதிய யெருசலேமாகத் திருச்சபை மிளிரும்.

## யூக்ரேனியாவில் ஆயர்களின் மறைமுகப்பணி

சோவியத் ருஷியாவின் யூக்ரேனியா பகுதியில் 10ஆயர்கள் மறைமுகமாக பணியாற்றி வருகின்ருர்கள். 1980-ம் ஆண்டில் மூவரே இவ்விதமாகப் பணியாத்றிவந்தார்கள் என்று கூறப்பட்டது.

அண்மையில் உரோமாபுரியில் நடைபெற்ற யூக்ரேனிய மன்றத்தில் கருதினல் லுபாச்சிஸ்கி தமது அறிக்கையில் நூற்றுக்கணக்கான குருக்களும், ஆயிரம் துறவிகளும் யூக்ரேனிய கத்தோலிக்கருக்குப் பணி செய்கின்ருர்கள் என்று மேலும் குறிப்பிட்டார்.

ருஷ்ய அதிகாரிகள் திருச்சபைக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்றும், தமது பணிகளில் குறுக்கிடக் கூடாதென்றும் கூட்டத்தில் வற்புறுத்தப் பட்டது, எனினும் உரோமையிலிருந்து பிரிந்திருப்பதின் மூலம் இச் சுதந்திரம் கிடைக்குமாயின் அதைஏற்றுக் கொள்வதற்கு தாம் தயாராக இல்லை என்றும் கூறியுள்ளார்கள்.

## ஆலய ஆபிஷே....

(1-ம் பக்கத் தொடர்ச்சி

பவனியிலும் பங்கு கொண்டார்.

கைத்தொழில் நகரமான மோடிநகரில் இவ்வாலயக் கட்டடவேலை மூன்று ஆண்டுகளுக்குமுன் ஆரம்பிக்கப்பட்டது. பங்குக் குருவான சுவாமி வாரீதியா அங்கு சென்றபோது அவ்விடம் வெறும் கட்டாந்தரையாக இருந்தது. அவரது முயற்சியால் ஆலயம் மட்டுமன்றி ஒரு பாடசாலை, கன்னியர்மடம், குருமனை ஆகியனவும் அமைக்கப்பட்டன. ஆலயத்தை [illegible] பற்றிக் நாயர் அவர்கள் ஆசீர்வதித்தார்.

## இன்றைய பத்திரிகைத்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளையில் செய்திகளுக்கு இடப்படும் தலைப்புகளில் இவ்வாருன சொற்கள் முக்கியத்துவம் பெற்று வருவதையும் காணமுடியும். குறிப்பிட்ட காலத்துக்குள் (Column) குறிப்பிட்ட தொகை எழுத்துக்களையே தலைப்பாகப் போடமுடியுமென்ற பிரச்சினை எழும்போது, எழுத்துச் சிக்கனத்துக்காக சிறிய சொற்ருெடர்கள் தேவைப்படுவதே இதற்கு காரணம்.

உதாரணமாக, வரவு செலவுத் திட்டம் என்று எழுதும் போது பன்னிரண்டு எழுத்துச்கள் தேவைப்படுகின்றன. இதனை ''பட்ஜட்'' என்று குறிப்பிடும்போது நான்கு எழுத்துக்கள் மட்டுமே போதும். பாராளுமன்ற உறுப்பினரை ''எம். பி'' என்று எழுதுவதும் இவ்வாருன காரணத்தினலேயேதான்.

இதுமட்டுமன்றி, சில செய்தித் தலைப்புகள் தனித்தமிழில் எழுதும்போதும் இவ்வாருன சிக்கனம் அவசியமாகின்றது. இதனல் கண்காணிப்புச் சபை என்பது, கண்காணிப்பு சபை என்றும், சூட்டுக்குப் பலி என்பது சூட்டுக்கு பலி என்றும் செய்தித் தலைப்புகள் இடம்பெறுவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

இவைகளை ஒரு புறத்தே விட்டு பொதுவாகப் பார்க்குமிடத்து, அனைத்து வாசகர்களையும் ஒரே தரத்தில் எடை போட்டு, அனைவரும் தாமாகவே படித்து செய்திகளை விளங்கிக் கொள்ளக்கூடியதான இலகு நடையில் எளிமையாகவும், தெளிவாகவும் செய்திகளை வெளியிடுவதையே பத்திரிகைகள் விரும்புகின்றன.

பல மணித்தியாலங்களுக்கு கேள்வி-பதில் அமைப்பில் ஆராயப்பட வேண்டிய இவ்விடயத்தை குறுகிய நேரத்துக்குள் ஒரு பேச்சாக எடுத்துக் கூறுவது சிரமமாகும். சந்தர்ப்பம் கிடைக்கும்போது இதனை ஒரு முழுநாள் கருத்தரங்காவே நீங்கள் நடத்தினல் மேலும் பல கருத்துக்களை கேட்கவும், எடுத்துக் கூறவும் முடியும்.

எஸ். திருச்செல்வம்
பிரதம ஆசிரியர்
ஈழமுரசு

## மறை ஆசிரியர் பயிற்சி—1986

மூன்று மாத மறை ஆசிரியர் பயிற்சி (1986)தை மாதத்தில் யாழ். மறைக்கல்வி நிலையத்தில் ஆரம்பமாகும். பங்குத் தந்தையின் அனுமதியுடன் எம்மிடமிருந்து பெறும் விண்ணப்ப படிவத்தை நிரப்பி 15-12-85-க்குமுன் சமர்ப்பிக்க வேண்டும்.

இயக்குநர்
A/205 யாழ். மறைக்கல்வி நிலையம்

டிசம்பர் 8

**புனித மரியன்னையின் மாசற்ற உற்பவம்**

பெருவிழாவும் கடன்திருநாளும்

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமைப்[illegible] யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org